KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 33, 28 August 2026 இதழ்:- 23

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
HOMELIFE
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் 12ம் 1ம் 16ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# அமெரிக்காவுக்கு பதிலடி கொடுத்த கனடா! 700 பொருட்களுக்கு வரி விதிப்பு! கனடா மிகவும் நியாயமற்ற நாடு என டிரம்ப் கடுமையாகச் சாடல்!



அமெரிக்கா விதித்துள்ள 50 சதவீத சுங்கவரிக்கு பதிலடியாக, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 700 பொருட்களுக்கு 15 முதல் 50 சதவீதம் வரை வரி விதிக்க கனடா தீர்மானித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வந்த நிலையில் அமெரிக்கா திடீரென கனடா மீது 50 சதவீத வரியை விதித்தது. இதனால் ஏற்கனவே பதற்றமடைந்திருந்த அமெரிக்கா — கனடா உறவில் மேலும் விரிசல் ஏற்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் வர்த்தகக் கொள்கைகள் மற்றும் கடுமையான நடவடிக்கைகளால் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக முரண்பாடுகள் தீவிர மடைந்துள்ளன. (4ம் பக்கம் பார்க்க)

## ஹொங்கொங் சீன பல்கலைக்கழகத்தில் தமிழீழ ஆராய்ச்சி!

# போரில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும் ஈழப்போரின் முடிவு முழுமையான அமைதியைத் தரவில்லை! முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலர் கிருஷ்ணன் சீனிவாசன் கருத்து

2003ஆம் ஆண்டில் புலிகள் முன் வைத்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நிராகரித்ததால் பாராளுமன்றம் கலைக்கப் பட்டது. 2004 ஆம் ஆண்டில் சுனாமிக்குப் பிறகு மீண்டும் தொடங்க முயன்ற பேச்சுவார்த்தை உச்சநீதிமன்றத் தலையீட்டால் முடிவுக்கு வந்தது என தெரிவித்துள்ள முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் கிருஷ்ணன் சீனிவாசன் 2009 ஆம் ஆண்டில் போரில் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும், போருக்கான அடிப்படை அரசியல் காரணங்களுக்கும் இனப்பிரச்சினைக்கும் இன்றும் முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார். (3ம் பக்கம் பார்க்க)



## முதலமைச்சர் பதவி மோகமும் சமூக ஊடக கோமாளிக் கூத்தும்

THINKING OF
# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com
*Your neighborhood sales representative*



**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

RE/MAX ACE EXPERIENCE THE DIFFERENCE REALTY INC., BROKERAGE
INDEPENDENTLY OWNED & OPERATED
we are ace


**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com


REALTOR MLS MULTIPLE LISTING SERVICE

23 Years Real Estate Experience

150 Consumers Rd #109, North York, ON M2J 1P9, Canada
**Bus: 416-293-4500**





• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Adelaide Ave E / Simcoe St


**Oshawa** $699,000
3+2 Beds • 2 Baths • 9 Rooms
high-demand rental area

### Kingston Rd & Sheppard Ave E


**Scarborough** $710,000
3+2 Beds • 3 Baths • 8 Rooms
open living and dining area

### Islington Ave / Steeles Ave W


**Toronto** $749,000
4 Beds • 2 Baths • 8 Rooms
Corner Condo Townhouse

### Neilson Road & Sheppard


**Scarborough** $839,000
4+1 Beds • 3 Baths • 7+3 Rooms
Location, location, location!

### Danforth and Dawes


**Toronto** $839,999
2+1 Beds • 2 Baths • 7 Rooms
Corner suite, unobstructed views

### Williamson & Westney


**Ajax** $849,000
3 Beds • 3 Baths • 7 Rooms
Detached 2-storey home

### Rogers and Dufferin St


**Toronto** $849,999
3 Beds • 2 Baths • 6+1 Rooms
fully renovated from top to bottom

### Markham Rd & Lawrence Ave


**Scarborough** $999,000
3+3 Beds • 4 Baths • 6+5 Rooms
fully renovated bungalow

### Harmony Road / Conlin Road


**Oshawa** $999,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Upgraded from top to bottom

### Cameo St / Burkolder Dr


**Pickering** $999,900
3 Beds • 3 Baths • 7 Rooms
Newly built detached home

### Hwy10 / Hwy 89


**Shelburne** $999,900
5 Beds • 5 Baths • 10 Rooms
Luxurious savile row model home

### Markham/Steeles


**Markham** $999,999
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Fin.basement with sep.entrance

### Markham Rd/ Lawrence Ave E
FOR LEASE


**Scarborough** $2,700
3 Beds • 1 Baths • 6 Rooms
Recently refreshed with new paint

### Markham Rd & Sheppard Ave
FOR LEASE


**Scarborough** $2,250
1+1 Beds • 1 Bath • 5 Rooms
Open concept w/ natural sunlight

### Simcoe St/ Windfields Farm Dr
FOR LEASE


**Oshawa** $1,500
1 Bed • 1 Bath • 3 Rooms
Basement with sep entrance

### Markham & Denison
FOR LEASE


**Markham** $1,450
1 Bed • 1 Bath • 4 Rooms
Basement with sep entrance

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# போரில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும் ஈழப்போரின் முடிவு முழுமையான அமைதியைத் தரவில்லை

## முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலர் கிருஷ்ணன் சீனிவாசன் கருத்து



2003ஆம் ஆண்டில் புலிகள் முன் வைத்த இடைக்கால நிர்வாகக் கட்ட மைப்பை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நிராகரித் ததால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டில் சுனாமிக்குப் பிறகு மீண்டும் தொடங்க முயன்ற பேச்சு வார்த்தை உச்சநீதிமன்றத் தலையீட் டால் முடிவுக்கு வந்தது என தெரி வித்துள்ள முன்னாள் இந்திய வெளி யுறவுச் செயலாளர் கிருஷ்ணன் சீனி வாசன், 2009 ஆம் ஆண்டில் போரில் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும், போருக்கான அடிப்படை அரசியல் காரணங்களுக்கும் இனப் பிரச்சினை க்கும் இன்றும் முற்றுப்புள்ளி வைக்கப் படவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையில் அரச தரப்பு பிரதானியாக பங்காற்றிய முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் எழுதிய 'தி ஸ்ரீலங்கன் பீஸ் புரோசஸ்' (The Sri Lanka Peace Process) என்ற நூலுக்கு, இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் கிருஷ்ணன் சீனிவாசன் விரிவான ஆய்வை எழுதி யுள்ளார்.

அந்த ஆய்விலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல், 2002–2004 அமைதி முயற்சியின் பின்னணியில் நடந்த அரசியலையும் சர்வதேச அழுத்தங்களையும் வெளிச்சத் திற்கு கொண்டு வந்துள்ளதுடன், 2002 முதல் 2004 வரை நடைபெற்ற அமை திப் பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசுத் தரப்புக் குழுவின் தலைவராக பீரிஸ் செயல்பட்டதால், அவரது பதிவு தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று ஆவணமாக முன்னாள் வெளியுறவுச் செயலாளர் கிருஷ்ணன் சீனிவாசன் இதனை சுட்டிக் காட்டியுள்ளார். அந்த நூல் ஆய்வில் மேலும் குறிப்பிடப்பட்டு ள்ளதாவது, 1994ஆம் ஆண்டில் அப் போதைய ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கா காலத்தில் தொடங்கி, 1999 ஆம் ஆண்டில் நோர்வே மத்தியஸ்தத்துடன் புதுவேகம் பெற்ற இந்த அமைதிச் செயல்முறை, ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் தாய்லாந்து, ஜெர்மனி, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளில் ஆறு சுற்று களாக நடைபெற்றது.

இருப்பினும் 2004ஆம் ஆண்டில் சுனாமிக்குப் பிறகு பேச்சுவார்த்தை முடங்கி 2009 ஆம் ஆண்டில் புலிகளின் வீழ்ச்சியோடு போர் முடிவுக்கு வந்தது. இந்தப் பேச்சுவார்த்தை தோல்வியடைந் ததற்கான முதன்மைக் காரணங்களை கிருஷ்ணன் சீனிவாசன் சுட்டிக்காட்டு கிறார்.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை யைத் தங்களது சர்வதேச அங்கீகாரத்திற் கான வழியாக மட்டுமே பார்த்தனர். கூட்டாட்சி முறையை ஆராய்வதில் அவர்களுக்கு ஆர்வம் இருக்கவில்லை. அதேவேளையில், இலங்கை அரசும் ஒற்றையாட்சி அரசியலமைப்பிலிருந்து விலகிச் செல்லத் தயங்கியது. மேலும், தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங் களின் முக்கியப் பங்காளிகள் புறக் கணிக்கப்பட்டதும், ஜனாதிபதி சந்திரிகா வுக்கும் பிரதமர் ரணிலுக்கும் இடை யிலான அரசியல் மோதல்களும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தின.

அரசியலமைப்பு ரீதியான அதிகாரப் பரவலாக்கலுக்கு முன்னுரிமை அளிக்கா மல், பொருளாதாரச் சீரமைப்பிற்கும் சர்வதேச நிதி உதவிகளுக்கும் முன்னு ரிமை அளித்தது 'குதிரைக்கு முன்னால் வண்டியைக் கட்டிய கதையாக' அமைதி பேச்சு வார்த்தை மாறியது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குப் நிவாரணம் அனுப்பி மக்களைப் பிரிக்க சந்திரிகா முயன்ற நிலையில், ரணிலோ (18ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# அமெரிக்காவுக்கு பதிலடி கொடுத்த கனடா! 700 பொருட்களுக்கு வரி விதிப்பு!

# கனடா மிகவும் நியாயமற்ற நாடு என டிரம்ப் கடுமையாகச் சாடல்!



அமெரிக்கா விதித்துள்ள 50 சதவீத சுங்கவரிக்கு பதிலடியாக, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 700 பொருட்களுக்கு 15 முதல் 50 சதவீதம் வரை வரி விதிக்க கனடா தீர்மானித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வந்த நிலையில், அமெரிக்கா திடீரென கனடா மீது 50 சதவீத வரியை விதித்தது.

இதனால் ஏற்கனவே பதற்றமடைந்திருந்த அமெரிக்கா — கனடா உறவில் மேலும் விரிசல் ஏற்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் வர்த்தகக் கொள்கைகள் மற்றும் கடுமையான நடவடிக்கைகளால் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளன.

இந்த வர்த்தக முரண்பாடுகளுக்கு தீர்வு காணவும், அமெரிக்கா விதித்துள்ள வரியை தவிர்ப்பது தொடர்பிலும் வொஷிங்டனில் இரு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இடையே அண்மையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

எனினும் அந்த பேச்சுவார்த்தையில் எந்தவொரு இறுதி உடன்பாடும் எட்டப்படவில்லை. இதனையடுத்து, கனடா மீது 50 சதவீத சுங்கவரி விதிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அறிவித்தார்.

அத்துடன் கனடா தொடர்பில் கடுமையான விமர்சனங்களையும் அவர் முன்வைத்திருந்தார். இந்த நிலையில், அமெரிக்காவின் நடவடிக்கைக்கு பதிலடி கொடுக்கும் வகையில், அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 700 பொருட்களுக்கு 15 முதல் 50 சதவீதம் வரை சுங்கவரி விதிக்கப்படும் என கனடா பிரதமர் மார்க் கார்னி அறிவித்துள்ளார்.

இந்த புதிய வரி நடவடிக்கை எதிர் வரும் செப்டெம்பர் 8 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதனிடையே, அமெரிக்காவுடன் முன்னர் காணப்பட்ட உறவு மீண்டும் அதே நிலைக்கு திரும்புவதற்கான வாய்ப்பு இல்லை என கனடா பிரதமர் மார்க் கார்னி முன்னதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய இரு நாடுகளும் நீண்டகாலமாக நெருக்கமான வர்த்தக உறவுகளை கொண்டுள்ள நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள வர்த்தக மோதல் இரு நாடுகளின் பொருளாதார உறவுகளில் மேலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை கனடா பல ஆண்டுகளாக அமெரிக்காவை பொருளாதார ரீதியில் சாதகமாக பயன்படுத்தி வந்ததாகவும், இனி அந்த நிலை தொடர அனுமதிக்கப்படாது என்றும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் கனடா இடையேயான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, கனடா மீது அமெரிக்கா 50 சதவீத இறக்குமதி வரியை விதித்துள்ளதுடன், கனடாவின் வர்த்தக நடைமுறைகள் தொடர்பான அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த வரி நடவடிக்கைக்கு பதிலளிக்கும் வகையில், அமெரிக்கப் பொருட்கள் மீது எதிர் வரி விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கனேடிய பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா வழங்கிய சலுகைகளை ஏற்றுக்கொள்ள கனடா மறுத்ததுடன், தேவையற்ற கோரிக்கைகளை முன்வைத்ததன் காரணமாகவே இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் முறிந்ததாக வெள்ளை மாளிகை குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில், கனடா பல ஆண்டுகளாக அமெரிக்காவை சுரண்டி வந்ததாக ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இனி அவர்களை இதிலிருந்து தப்பிக்க விடப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்ததாக வெள்ளை மாளிகை குறிப்பிட்டுள்ளது. மேலும், அமெரிக்காவின் ஆதரவின்றி கனடாவால் நிலைத்திருக்க முடியாது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக் ப்பட்டுள்ளது.

அமெரிக்க பொருளாதாரம் கனடாவின் பொருளாதாரத்தை விட 13 மடங்கு பெரியது என்றும், அமெரிக்காவில் கனடாவை விட எட்டு மடங்குக்கும் அதிகமான மக்கள் வசிப்பதாகவும் வெள்ளை மாளிகை சுட்டிக்காட்டியுள்ளது. இதன் அடிப்படையில், அமெரிக்காவுக்கே தெளிவான பொருளாதார சாதகம் இருப்பதாகவும், கனடா மிகவும் நியாயமற்ற நாடு எனவும் வெள்ளை மாளிகை கடுமையாக விமர்சித்துள்ளது.

இது இவ்வாறிருக்க இரு நாடுகளுக்கும் இடையே எல்லைப் பகுதியாக உள்ள புகழ்பெற்ற 'ஒன்டா ரியோ ஏரியின் பெயரை 'அமெரிக்கா ஏரி' என மாற்றப் பரிசீலித்து வருவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்துடன் இனி பெரிய அளவில் வர்த்தகம் மேற்கொள்ள மாட்டோம் என்பதால், ஒன்டாரியோ ஏரியின் பெயரை 'அமெரிக்கா ஏரி' என மாற்றுவது குறித்து அமெரிக்கா தீவிரமாக பரிசீலித்து வருகிறது என டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார். முன்னதாக மெக்சிகோ வளைகுடாவின் பெயரை 'அமெரிக்க வளைகுடா' என டிரம்ப் மாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




# ஹொங்கொங் சீன பல்கலைக்கழகத்தில் தமிழீழ ஆராய்ச்சி!

ஹொங்கொங் சீனப் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடம், 'நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்' எனறு அழைக்கப்படும் அமைப்புடன் இணைந்து 'தமிழீழ அரசுரிமை' குறித்த கலாநிதிப் பட்ட ஆராய்ச்சித் திட்டம் ஒன்றிற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியிருப்பதாக ஸ்ரீலங்கா கார்டியன் கடந்த வாரம் செய்தி யொன்றை வெளியிட்டது.

பேராசிரியர் அலெக்ஸ் கிரீன் என்பவரின் வழிகாட்டுதலில் முன்னெடுக்கப்பட விருப்பதாகக் கூறப்படும் இந்த ஆய்வு முயற்சி வெறும் கல்விசார் எல்லைகளைத் தாண்டி, பூகோள அரசியல் மற்றும் தேசங்களின் இறையாண்மை சார்ந்த உணர்வுபூர்வமான விவாதங்களை தூண்டி விடக்கூடிய சாத்தியத்தைக் கொண்டி ருக்கிறது.

இந்த திட்டம் அது முன்னெடுக்கப்படும் இடம் காரணமாக கூடுதல் முக்கியத் துவத்தைப் பெறுகிறது. 'ஒரே நாடு, இரண்டு முறைமை' என்ற கோட்பாட்டின் கீழ் இயங்கும் ஹொங்கொங், சீன மக்கள் குடியரசின் முழுமையான கட்டுப் பாட்டிற்குட்பட்ட ஒரு பிராந்தியம். இலங்கை அரசாங்கத்தின் மிக நெருங்கிய பொருளாதார மற்றும் இராஜதந்திர கூட்டாளியாக சீனா விளங்கும் பின்புலத்தில், சீனக் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு பல்கலைக்கழகம், இலங்கையிலிருந்து பிரிந்து செல்லும் ஒரு தனிநாட்டின் சட்டபூர்வ சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய அனுமதித்திருப்பது ஒரு ஆச்சரியத்திற்குரிய பூகோள அரசியல் விசித்திரமாகும்.

சீனா தனது சொந்த பிராந்தியங்களான தைவான், திபெத் மற்றும் சின்ஜியாங் விவ காரங்களில் 'பிரிவினைவாதத்திற்கு' எதிராகக் கடுமையான, சகிப்புத் தன்மையற்ற கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. அத்தகையதொரு நாட்டின் நிறுவனக் கட்டமைப்பிற்குள், மற்றொரு நட்பு நாட்டுடன் தொடர்புடைய பிரிவினைவாதக் கோட்பாடு தொடர்பான ஆய்வுக்குக் களமமைத்துக் கொடுக்கப்பட்டிருப்பது, பெய்ஜிங்கின் வெளியுறவுக் கொள்கை, ஹொங்கொங்கின் கல்விச் சுதந்திரம் ஆகிய வற்றின் எல்லைகள் குறித்து கொழும்பு இராஜதந்திர மட்டத்தில் பல கேள்விகளை நிச்சயமாக எழுப்பும்.

பேராசிரியர் கிரீனின் 'அரசியல் சமூகமாக அரசுரிமை' (Statehood as Political Community) என்ற கோட்பாட்டுச் சட்டகத்தின் கீழ் அமையும் இந்த ஆய்வு, தமிழீழக் கோரிக்கையை வெறும் ஆயுதமேந்தியப் போராட்டத்தின் எச்சமாகப் பார்க்காமல், சர்வதேச சட்டத்தின் கீழ் 'புதிய நாடுகளின் உதயம்' மற்றும் 'அரசுரி மைக்கான தகுதி' என்ற கல்விசார் தளத்திற்கு உயர்த்த முற்படுகிறது என்று அவதானிகள் கூறுகிறார்கள்.

இலங்கை அரசு நீண்டகாலமாகத் தமிழீழக் கோரிக்கையைத் பயங்கரவாத மற்றும் சட்டவிரோதப் பிரிவினைவாதக் கண்ணோட்டத்திலேயே கையாண்டு வந்துள்ளது. ஆனால், இத்தகைய சர்வதேசக் கல்விசார் ஆய்வுகள், ஐக்கியநாடுகள் சபையின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடுகளினதும் சர்வதேசச் சட்டங்களினதும் அடிப் படையில் அந்த கோரிக்கையை ஒரு ஜனநாயக ரீதியான, சட்டப்பூர்வமான விவாதப் பொருளாக சர்வதேச சமூகத்தின் முன் மீளநிலை நிறுத்தக்கூடும் என்பதும் அவதானிகளின் அபிப்பிராயமாக இருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரை, நாட்டின் வடக்கு – கிழக்கு மாகாணங்களின் இறைமை மற்றும் எல்லை சார்ந்த விவகாரங்கள் மிகவும் உணர்வுபூர்வமானவை. உள்நாட்டில் பொருளாதார மீட்சி, தேசிய நல்லிணக்கம் ஆகியவை குறித்த பேச்சுகள் இடம்பெற்று வரும் தற்போதைய சூழலில், இச்செய்தி கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கடும் கவலையையும் எதிர்ப்பையும் உருவாக்கக்கூடும்.

குறிப்பாக, தென்னிலங்கை அரசியல் சக்திகள் இதனை இலங்கை அரசின் இறையாண்மைக்கு எதிரான சர்வதேசச் சதியாகச் சித்தரிக்க முயற்சிக்கலாம். இந்த பல்கலைக்கழக ஆய்வுத் திட்டம் தமிழீழத்தை உருவாக்குவதற்கான ஒரு நேரடி அரசியல் ஆதரவு அல்ல என்றும், இது ஒரு கல்விசார் மதிப்பீடு என்றும் பல்கலைக் கழகத் தரப்பில் விளக்கமளிக்கப்பட்டதாக செய்தியில் கூறப்பட்டுள்ள போதிலும், இதன் அரசியல் தாக்கம் தவிர்க்க முடியாதது.

# பயங்கரவாதத் தடைச்சட்டம் இவ்வாண்டுக்குள் முழுமையாக இரத்துச் செய்யப்படும்?



பயங்கரவாத தடைச்சட்டம் மனித உரிமைகளுக்கு எதிரானது என்ற நிலை ப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். இந்த சட்டம் இந்த ஆண்டுக்குள் முழுமை யாக இரத்துச் செய்யப்படும். தேசிய பாதுகாப்பையும், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை பாதுகாக்கும் வகையில் புதிய சட்டம் இயற்றப்படும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப் பாடுகள் அமைச்சர் ஹர்ஷன நாணயக் கார தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கம் தொடர்பில் வினவியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

யங்கரவாத தடைச்சட்டம் எந்தளவுக்கு மோசமானது என்பதை நாங்கள் நன்கு அறிவோம். இந்த நாட்டில் வரலாற்று ரீதியில் பல முரண்பாடுகள் ஏற்படுவ தற்கு அந்த சட்டம் பிரதான காரணி யாக அமைந்துள்ளது. 1979 ஆண்டு தற்காலிக ஏற்பாடாக கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் இன்றளவில் அமுலில் உள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஒருசில ஏற்பாடுகள் அடிப்படை மனித உரிமை களுக்கும், ஜனநாயக கொள்கைக்கும் எதிரானது என்பதை ஏற்றுக்கொள் கிறோம். தேசிய மற்றும் சர்வதேச மட்ட த்தில் இந்த குறைபாடுகள் முன்வைக்க ப்பட்டு, பல யோசனைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து பயங் கரவாத தடைச் சட்டத்தை முழுமை யாக இரத்துச் செய்வோம் என்று மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம். இருப்பினும் போதைப்பொருள் மற்றும் பாதாள குழுக்களுடன் தொடர்புடைய குற்றங்கள், பயங்கரவாதத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்கு இந்த சட்டத்துக்கு அமையவே செயற்பட வேண்டிய (17ம் பக்கம் பார்க்க)

# அமிர்தலிங்கத்தின் சுவடுகளும் இன்றைய தமிழர் அரசியலும்



தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி யின் முன்னாள் பொதுச் செயலாளர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தின் 99 வது பிறந்த தினம் 26 ஆகஸ்ட் 2026 ஆகும்.

கடந்த நூற்றாண்டின் இலங்கைத் தமிழ் அரசியலின் திசை வழியை நிர்ணயித்த மிக முக்கிய ஆளுமைகளில் ஒருவரான அவரது மறைவுக்குப் பின்னர தமிழ் அரசியல் அரங்கில் ஏற்பட்ட தலைமை த்துவ வெற்றிடம் இன்றுவரை முழுமையாக நிரப்பப்படாமலேயே உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.

அமிர்தலிங்கத்தின் அரசியல் காலம் என் பது வெறும் வாக்கு வங்கி அரசியலாக மட்டும் இருக்கவில்லை. அது கொள்கை உறுதி, சர்வதேச இராஜ தந்திரம், பாராளுமன்ற வாதத்திறமை ஆகியவற்றின் கலவையாக இருந்தது.

அன்றைய பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரைகளும் அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக முன் வைத்த சட்டபூர்வ மற்றும் அரசியல் ரீதியான வாதங்களும் உலகளவில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை உற்று நோக்கச் செய்தன.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலை வராக இருந்த போதும் கூட அமார்த லிங்கம் பேணிய அரசியல் நாகரிகமும் கண்ணியமான அணுகு முறையும் அவரை ஒரு தலைசிறந்த இராஜதந்திரி யாக உயர்த்தியது.

ஆனால், இன்றைய தமிழ் அரசியல்வாதி களினதும் பாராளுமன்ற உறுப்பினர் களினதும் செயல்பாடுகளையும் பேச்சுக் களையும் அமிர்தலிங்கத்தின் ஆளுமை யோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது பெரும் ஏமாற்றமே மிஞ்சுகிறது.

அமிர்தலிங்கம் தனக்குச் சாதகமான சூழலுக்காகக் கொள்கைகளை மாற்றிக் கொண்டவர் அல்ல. ஆனால் இன்றைய பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பி னர்கள், தற்காலிக தேர்தல் வெற்றிகளுக் காகவும் தனிப்பட்ட நன்மைகளுக் காகவும் உணர்ச்சி வசப்பட்ட கோஷங் களை மட்டுமே நம்பியிருக்கிறார்கள்.

அன்றைய தமிழ் தலைவர்கள் சர்வதேச சமூகமும் தென்னிலங்கையும் உற்று நோக்கும் வகையில் சட்ட மற்றும் வரலாற்று சான்றுகளுடன் வாதிட்டனர்.

இன்றைய தலைவர்களின் பேச்சுகள் பெரும்பாலும் சமூக ஊடகங்களின் 'லைக்'குகளையும், ஆதரவாளர்களான் கைதட்டல்களையும் மட்டுமே இலக் காகக் கொண்டு அமைந்த வெறும் சத்தங்களாகச் சுருங்கி விட்டன.

அமிர்தலிங்கம் சர்வதேச அரசியல் நகர்வு களைச் சரியாகக் கணித்து காய்களை நகர்த்தினார்.

இன்றைய அரசியல்வாதிகளோ தங்களு க்குள்ளேயே சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து உட்கட்சிப் பூசல்களிலும் பரஸ் பர குற்றச் சாட்டுகளிலும் மட்டுமே நேரத்தைச் செலவிட்டு வருகின்றனர்.

இன்றைய தமிழ் மக்களுக்குத் தேவை வெறும் உணர்ச்சிமிக்க உரைகளோ அல்லது தேர்தல் கால வாக்குறுதிகளோ அல்ல. அமிர்தலிங்கம் காட்டிய அரசியல் முதிர்ச்சி, சர்வதேச ரீதியிலான இராஜ தந்திர அணுகுமுறை, மற்றும் அனைத் துத் தரப்பையும் ஒருங்கிணைத்துச் செல்லும் பரந்த பார்வை ஆகியவையே ஆகும்.

அமிர்தலிங்கத்தின் 99வது பிறந்தநாளை நினைவுகூரும் இந்த வேளையில், தற் போதைய தமிழ் பாராளுமன்ற உறுப் பினர்கள் தங்களைச் சுயபரிசோதனை செய்ய வேண்டும்.

தனிப்பட்ட சுயநலன்களையும் குறுகிய அரசியல் இலாபங்களையும் கடந்து, உண்மையான தலைமைத்துவப் பண போடு மக்களை வழிநடத்த முன் வருவதே அமிர்தலிங்கம் போன்ற மாபெரும் தலைவருக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்.

# வலி.வடக்கு விடுவிக்கப்பட்ட காணிகளில் வீடுகள் கட்ட அரசாங்கம் அனுமதி!

யாழ்ப்பாணத்தில் வலி. வடக்கு மீள்குடியேற்ற பகுதியில் இராணுவத்தினரால் விவசாய நடவடிக்கைகளுக்கு மட்டும் என விடுவிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளில் வீடுகளை கட்டுவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

27 ஆகஸ்ட் 2026 புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தேசிய மக்கள் சக்தி தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், ஏற்கனவே வலி. வடக்கு மீள்குடியேற்றப் பகுதியில் பொதுமக்களின் காணிகள் விடு விக்கப்பட்ட போதும் இராணுவத்தினரால் விவசாய நடவடிக்கைகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது ஜனாதிபதியே அனுரகுமார திசாநாயக்கவின் உத்தரவுக்கு அமைய விடு விக்கப்பட்டு விவசாய நடவடிக்கைகளுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்ட தனியார் காணிகளில் வீடுகள் தேவையெனின் கட்ட முடியும். அரசாங்க வீட்டுத் திட்டம் தேவையானவர்கள் உரிய நடைமுறைகளை பின்பற்றி பிரதேச செயலகத்தின் ஊடாக விண்ணப்பிக்கும் பட்சத்தில் தகுதியானவர்களுக்கு வீட்டுத் திட்டம் கிடைக்கும் என மேலும் தெரிவித்தார்.

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் கணிசமான திருத்தங்கள் அவசியம்! சர்வதேச நெருக்கடி கண்காணிப்புக்குழுவின் ஆய்வாளர் அலன்கீனன்

சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு ஏற்புடையவாறு இச்சட்டம் இருக்கின்றது எனவும், ஆகையினால் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெறுவதற்கு அவசியமான நிபந்தனைகளை அது பூர்த்தி செய்கின்றது எனவும் கூறவேண்டுமாயின், பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் வரைவில் கணிசமான அளவு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்று என சர்வதேச நெருக்கடி கண்காணிப்புக்குழுவின் ஆய்வாளர் அலன் கீனன் வலியுறுத்தியுள்ளார்.

பயங்கரவாதத்தடைச்சட்டத்துக்குப் பதிலாக அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தை அவசியமான திருத்தங்களுடன் வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், அதனைத்தொடர்ந்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் கடந்த வாரம் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இந்நிலையில் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம் தொடர்பில் சர்வதேச நெருக்கடி கண்காணிப்புக்குழுவின் ஆய்வாளர் அலன் கீனன் அவரது எக்ஸ் தளப் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறார். அப்பதிவில் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம் மிகமோசமானது என்றும், இதனுடன் ஒப்பிடுகையில் பயங்கரவாதத்தடைச் சட்டம் தீவிரத்தன்மை குறைந்ததுபோல் தென்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



அதேவேளை இப்புதிய வரைவு வர்த்தமானியில் வெளியிடப்படும்போது, அதில் அரசாங்கம் செய்திருக்கும் மாற்றங்கள் என்னவென்பதைப் பார்க்கமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு ஏற்புடையவாறு இச்சட்டம் இருக்கின்றது எனவும், ஆகையினால் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெறுவதற்கு அவசியமான நிபந்தனைகளை அது பூர்த்தி செய்கின்றது எனவும் கூற வேண்டுமாயின், அச்சட்ட வரைவில் கணிசமான அளவு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கனடாவில் ஈழத்தமிழர்களின் பங்களிப்பு அளப்பரியது! யாழ்ப்பாணத்தில் இலங்கைக்கான கனடியத் தூதுவர் தெரிவிப்பு!

கனடாவில், ஈழத் தமிழர்களின் பங்களிப்பு மிகவும் அளப்பரியது என இலங்கைக்கான கனடிய உயர்ஸ்தானிகர் இஸபெலா மார்டின் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண மருத்துவமனைகளுக்கு குருதி சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்கும் நிகழ்வு கடந்த 20ஆம் திகதி யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மருத்துவ சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான கனடிய உயர்ஸ்தானிகர் இஸபெலா மார்டின் மற்றும் வட மாகாண ஆளுநர் என். வேதநாயகன், இந்த குருதி சுத்திகரிப்பு இயந்திரங்களை நன்கொடையாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்று இருந்தனர்.

இலங்கையிலிருந்து கனடாவிற்கு வந்த இலங்கையர்கள் அந்நாட்டுக்கு பல்வேறு வகையில் சேவைகளை வழங்கி வருவதாக இலங்கைக்கான கனடிய தூதுவர் இஸபெல்லா மார்டின் தெரிவித்துள்ளார்.



கனடாவின் வெற்றிக்கு புலம் பெயர் இலங்கையர்களின் பங்களிப்பு மகத்துவமானது என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கனடிய புலம்பெயர் தமிழர்கள் தாயகத்திற்கு கொடைகளை வழங்குவதும் தங்களது திறமைகளை வழங்குவதும் மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

கனடாவில் பெற்றுக் கொண்டவற்றை தாயக சமூகத்திற்கு வழங்குவது போற்றுதற்குரியது என அவர் தெரிவித்துள்ளார். இந்தத் தருணம் பெரும் மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் தருவதாக அவர் குறிப்பிடுகின்றார்.

கனடாவின் சார்பில் இந்த நன்கொடை வழங்குவதற்கு வழங்கும் நிகழ்வுடன் தொடர்புடைய அனைவருக்கும் நன்றி பாராட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வு மின்னல் செந்தில்குமரனது நிவாரணம் அமைப்பு ஊடாக 6 குருதி சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்ட வைபவமாகும்.

கடந்த காலங்களில் புலம்பெயர் சமூகத்தினர் இலங்கையில் முதலீடு செய்வதில் எதிர்நோக்கிய நிர்வாக மற்றும் ஏனைய சிக்கல்களை களைவதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வடமாகாண ஆளுநர் இந்நிகழ்வில் பேசுகையில் குறிப்பிட்டார்


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# முதலமைச்சர் பதவி மோகமும் சமூக ஊடக கோமாளிக் கூத்தும்

முதலமைச்சர் பதவி மோகமும் சமூக ஊடக கோமாளிக் கூத்தும் மாகாணசபை தேர்தல்களை அரசாங்கம் விரைவில் நடத்துமோ இல்லையோ என்பதே தெரியாமல் இருக்கும் நிலையில்,வட மாகாணத்தின் அடுத்த முதலமைச்சராக வருவதற்கு சமூக ஊடகங்களில் இருவர் தங்களது சுயபிரசாரத்தை தீவிரப்படுத்தியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

2024 பொதுத்தேர்தலில் யாழ்ப்பாண மக்களில் ஒரு பிரிவினரின் அறியாத்தனத்தினால் பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்டு தமிழர் அரசியலை கவலைக்குரிய வகையில் மாசுபடுத்தி வரும் ஒரு வைத்தியரும் தமிழ் மக்கள்போரில் அவலப்பட்ட காலம் முழுவதும் வெளிநாட்டில் இருந்து விட்டு போர் முடிவுக்கு வந்த பின்னர் வடக்கில் வாணிபம் செய்து கொள்ளை இலாபம் சம்பாதிக்க வந்து இப்போது அரசியல் அவதாரம் எடுக்கத் துடிக்கும் ஒரு பேர் வழியுமே இந்த சமூக ஊடக பிரசாரத்தில் முன்னணியில் நிற்கிறார்கள்.

இதற்கிடையில், ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் பெயரும் அடிபடுகிறது. அவர் சமூக ஊடக கோமாளித்தனத்தில் தானாக ஈடுபடுவதில்லை என்பதை நேர்மையுடன் நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவரை ஏற்கெனவே வட மாகாண முதலமைச்சராக்கியதன் விளைவான கசப்பான அனுபவம் வடக்கு மக்களுக்கு இருக்கிறது. வரலாற்று தவறில் இருந்து பாடம் கற்றுக் கொள்ளாமல் மீண்டும் அதே பாதையில் செல்வதானால் அது அறிவின்மையின் உச்சமாக அமையும். மக்கள் சந்திக்கும் அன்றாட பொருளாதாரப் பிரச்சினை, தீர்வுகாணப்படாத இனப்பிரச்சினை மற்றும் அடிப்படை உரிமைகள் சார்ந்த கோரிக்கைகள் கவனிக்கப்படாத தனிநபர்களின் அரசியல் மோகமும் சுய புராணங்களும் முன்னிலைப்படுத்தப்படுவது வேதனைக்குரியது.

மக்கள் மன்றத்தில் ஆக்கபூர்வமான விவாதங்களை முன்னெடுப்பதற்கு பதிலாக, வடபகுதி மக்களின் அரசியல் முதிர்ச்சியையும் விவேகத்தையும் கேள்விக்குள்ளாக்கும் வகையில் தங்களை 'சமூக ஊடக கதாநாயகர்களாக' சித்தரிக்க முனையும் இந்த பேர் வழிகளின் செயற்பாடுகள் தமிழர் அரசியலின் தரவீழ்ச்சியையே அம்பலப் படுத்துகின்றன. போரினால் பாதிக்கப்பட்ட மண்ணில் வாணிபம் செய்து ,லாபம் ஈட்டியவர்கள்

இப்போது அந்த இலாபத்தை வைத்து மாகாண அரசியல் அதிகாரத்தைக் கைப் பற்றத் துடிப்பது மக்களுக்கு சேவை செய்வதற்கு அல்ல,. மாறாக அது அவர்களின் அடுத்த கட்ட முதலீடாகும். ,த்தகைய பேர்வழியின் பின்னணியில் நின்று வடக்கின் முக்கியமான அரசியல்வாதி ஒருவர் தூண்டிவிடுவதாகவும் தெரிய வருகிறது.

சமூக ஊடகங்களில் உருவாக்கப்படும் போலியான பிம்பங்களும் 'லைக்குகளும்' ஒருபோதும் மக்களின் உண்மையான அரசியல் விழிப்புணர்வாக மாறமுடியாது. சுய விளம்பரங்களினால் மக்களை ஏமாற்றி விடலாம் என்று நினைப்பது ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கும் செயலாகும்.

வடக்கு அரசியல் என்பது வெறும் தனிநபர் சார்ந்த கவர்ச்சிப் பிரசாரமோ அல்லது சமூக ஊடகக் கேலிக்கூத்தோ அல்ல. அது பல தசாப்தகால தியாகங்கள், இழப்புக்கள் மற்றும் தீர்வுகாணப்படாத உரிமைகள் சார்ந்த. – வலிகள் நிறைந்த ஒரு தளமாகும். தங்களின் தனிப்பட்ட சுயவிளம்பரங்களுக்காகவும் அரசியல் ஆசைகளுக்காகவும் வடக்கின் அரசியல் கௌரவத்தைச் சூறையாட நினைக்கும் இந்த பிரகிருதிகளை வடக்கு மக்கள் இனியும் அனுமதிக்கக்கூடாது. தகுதியும் தொலை நோக்குப் பார்வையும் மக்கள் நலனக்களில் உண்மையான அர்ப்பணிப்பும் கொண்ட தலைமைத்துவத்தை அடையாளம் காண்பதே இந்த அரசியல் கோமாளிக் கூத்துக்களுக்கு மக்கள் கொடுக்கக்கூடிய சரியான பதிலடியாக இருக்கும். இந்த கோமாளிகளை ஆதரிக்கவும் அவர்களுக்காக பரிந்து பேசவும் உள்நாட்டிலும் புலம் பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியிலும் கும்பல்கள் இருப்பது பெரும் முழுத் தமிழ்ச் சமூகத்துக்குமே வெட்கக் கேடாகும்.


# காணாமல் போனோரின் 31 பேரை இது வரை கண்டறிந்துள்ளார்களாம்



காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் , 31 பேரை தாம் இதுவரையில் கண்டறிந்துள்ளதாகவும் , 5, 540 பேருக்கு இடைக்கால நிவாரணம் வழங்கியுள்ளதாகவும், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த நிர்வாகக் குழு உறுப்பினர்களான தம்பையா யோகராஜா மற்றும் மிராக் ரஹீம் ஆகியோர் கலந்து கொண்ட ஊடக சந்திப்பு 23 ஆகஸ்ட் 2026 ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. குறித்த ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் 'எமக்குக் கிடைக்கப் பெற்ற 23,352 விண்ணப்பங்களில், (23ம் பக்கம் பார்க்க)



இன்று $200,000 வரை ஒரு புதிய வீட்டின் மீது மிச்சப்படுத்திடுங்கள் நாளை அது நிறைய குடும்பங்களாகவும் நிறைய வீடுகளாகவும் பெருகும்



புதிய வீட்டின் மீது $200,000 வரையிலும் எவ்வாறு மிச்சப்படுத்துவது என்பதை பின்வரும்இணையப் பக்கத்தில் அறிந்துகொள்ளுங்கள்:

ontario.ca/MoreHomesFaster

Ontario

ஒன்ராறியோ அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வெளியிடப்பட்டது.

# இலங்கையில் மனிதாபிமானப் பாதுகாப்பின் வீழ்ச்சியின் அடையாளம் மூதூர் படுகொலையென சர்வதேச மனிதாபிமான அமைப்புக்கள் தெரிவிப்பு!

மூதூர் படுகொலையானது இலங்கையில் மனிதாபிமானப் பாதுகாப்பின் வீழ்ச்சிக்கான அடையாளமாக மாறியிருப்பதாக லீகல் அக்ஷன் வேல்ட் வைட்' அமைப்பின் சட்ட ஆலோசகர் ஹெக்டர் ஷார்ப் மற்றும் 'அக்ஷன் எகெய்ன்ஸ்ட் ஹங்கர்' அமைப்பின் மனிதாபிமான கலந்தாய்வு அதிகாரி லில்லி ஸ்பார்க்ஸ் ஆகியோர் சுட்டிக் காட்டியுள்ளனர்.




இலங்கை இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் தீவிரமடைந்திருந்த வேளையில், 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4 ஆம் திகதியன்று 'அக்ஷன் எகெய்ன்ஸ்ட் ஹங்கர்' (பட்டினிக்கு எதிரான இயக்கம்) அமைப்பின் 17 தன்னார்வத் தொண்டுப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் இடம் பெற்று 20 வருடங்கள் கடந்திருக்கும் நிலையில், இன்னமும் அதற்குப் பொறுப்பானவர்கள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. இது குறித்து 'லீகல் அக்ஷன் வேல்ட் வைட்' அமைப்பின் சட்ட ஆலோசகர் ஹெக்டர் ஷார்ப் மற்றும் 'அக்ஷன் எகெய்ன்ஸ்ட் ஹங்கர்' அமைப்பின் மனிதாபிமான கலந்தாய்வு அதிகாரி லில்லி ஸ்பார்க்ஸ் ஆகியோர் வெளியிட்டுள்ள கட்டுரையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இயற்கைப் பேரிடர்கள் ஏற்படும் போதும், போர்கள் மூளும்போதும், பட்டினி பரவும் போதும் மனிதாபிமானப் பணியாளர்கள் உதவிக்கு வருவார்கள். நிர்க்கதி நிலையிலுள்ள சமூகங்கள் அவர்களது வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவர்கள் கைகொடுப்பார்கள். ஆனால் மக்களுக்கு உதவும் அவர்களே தாக்குதலுக்கு உள்ளானால் என்ன நேரும்? 2006 ஆம் ஆண்டு 'அக்ஷன் எகெய்ன்ஸ்ட் ஹங்கர்' (பட்டினிக்கு எதிரான இயக்கம்) அமைப்பின் 17 தன்னார்வத் தொண்டுப் பணியாளர்கள் படு கொலை செய்யப்பட்ட சம்பவம் மனிதாபிமான செயற்பாட்டாளர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியைத் தோற்றுவித்தது. இது மனித குலத்தின் மீதான தாக்குதலாகவே சகலராலும் நோக்கப் பட்டது.

மூதூர் படுகொலையானது இலங்கையில் மனிதாபிமானப் பாதுகாப்பின் வீழ்ச்சிக்கான அடையாளமாக மாறியிருக்கிறது. 2007 ஆம் ஆண்டு நோர்வே அகதிகள் பேரவையினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் 2006 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மனிதாபிமானப் பணிகளுக்கான இடைவெளி சுருங்கி வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# செம்மணி புதைகுழி அகழ்வுக்கு இதுவரை 58 மில்லியன் ரூபா செலவு

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்று கட்டங்களாக இதுவரை சுமார் 110 நாட்கள் அகழ்வுப் பணிகள் இடம் பெற்றுள்ள நிலையில், இதற்காக 5 கோடி 79 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகக் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த தெரிவித்தார்.இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் 584 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் இரத்த மாதிரிகளைச் சேகரித்து மரபணுச் சோதனைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை விரைவு படுத்துவோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# பலவீனமான தமிழரசுக்கட்சியும் இயக்கமற்ற சஜித்தின் தலைமையும் தேசியமக்கள் சக்திக்கான "போனஸ்"

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

தமிழர் தாயக அரசியல், சிங்கள தேச அரசியல் என்று நோக்கின் தமிழரசுக் கட்சியும் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியுமே கடந்த சில வாரங்களாக ஊடகங்களில் முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

ஆறு தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் கூட்டு கடந்த சில நாட்களாக பல சந்திப்புகளை மேற்கொண்டுள்ளது. இலங்கை ஜனாதிபதி, இந்திய வெளியுறவுச் செயலாளர், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் ஆகியோருடனான சந்திப்பு அடுத்தடுத்து







இடம் பெற்றது. இதன் தொடர்ச்சியாக, எதிர்க்கட்சித் தலைவரும் தேசிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டிலுள்ள பிரதிநிதிகளை அழைத்துச் சந்தித்தார்.

ஜனாதிபதி அநுர குமரவை இன்னும் எத்தனை தடவைகள் சந்தித்தாலும் தமிழர் தரப்பினரின் கோரிக்கைகளுக்கு ஒரே பதிலையே அவர் வழங்குவார்.

உரிய காலத்தில் பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவை இடம் பெறுமா என்கிற சந்தேகம் சிங்கள கட்சிகளுக்கே ஏற்பட்டுள்ள நிலையில், மாகாண சபை தேர்தல் மற்றும் புதிய அரசியலமைப்பு என்பவை அநுர அரசின் நிகழ்ச்சி நிரலில் உறுதியற்றவையாகவே காணப்படுகின்றன.

1977ல் முதன் முதலாக பிரதமர் என்ற பதவியுடன் ஆட்சிக் கதிரையில் ஏறிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன புதிய அரசியலமைப்பை உருவாக்கி தம்மைத் தாமே அதியுத்தம ஜனாதிபதியாக்கினார். சர்வ ஜன வாக்கெடுப்பை நடத்தி நாடாளுமன்ற ஆயுட் காலத்தை நீடித்தார். இவைகளை நன்கறிந்த இன்றைய ஆட்சித்தரப்புக்கு அந்த நடைமுறையை பின்பற்றுவதில் எந்தப் பிரச்சனையும் இருக்காது. ஜே.ஆரிடமிருந்த மூன்றிலிரண்டு பெரும்பான்மை அநுரவின் தேசிய சக்திக்கும் உண்டு. இது தமிழரசுக் கட்சிக்கும் அவர்களோடு இணைந்திருக்கின்ற முஸ்லிம் மற்றும் மலையக கட்சிகளுக்கும் தெரியும்.

ஏற்கனவே நாடாளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்து தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிட்டு தோல்வியடைந்த சுமந்திரனைப் பொறுத்தளவில் நாடாளுமன்றத் தேர்தலில் பங்கு பற்றுவதில் பெரும் அக்கறை இல்லை. அதனால் தான் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டுமென்ற குரலில் முன்னணியில் நிற்கிறார். அவருடைய இலக்கு வடக்கு மாகாண சபை தலைவர் பதவி. அதற்காகவே இந்திய உதவியை நாடிச் செல்கிறார்.

அநுரகுமர ஜனாதிபதியாக இருப்பதாலும், ஆட்சித் தலைவராக இருப்பதாலும் அவரைத் தொடர்ந்து தமிழ் பேசும் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்திப்பதில் தவறில்லை. ஆனால், இந்த அரசாங்கத்தை பின்னாலிருந்து ஆட்டுபவர் யார் என்பது இன்னமும் தெரியாமல் இருப்பது தான் தவறு. இலங்கையை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர போட்டியிட்டுக் கொண்டிருக்கும் இந்தியாவும், சீனாவும் அநுர குமரவை சந்திப்பதை விட ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவை சந்திப்பதிலேயே கூடிய அக்கறை காட்டி வருகின்றன. இரு நாட்டு அரசாங்கங்களும் ரில்வின் சில்வாவை தங்கள் நாட்டுக்கு அழைத்து ஆலோசனை வழங்குகின்றன. ஜே.வி.பி.யின் தலைமை அலுவலகத்துக்குச் சென்று ரில்வின் சில்வாவுடன் உரையாடுகின்றனர். அநுர குமரவின் ஆட்சி ரில்வின் சில்வாவின் கைகளில் தான் இருக்கிறது என்பதை சீனாவும் இந்தியாவும் தெரிந்து கொண்ட அளவுக்கு தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டில் இருப்பவர்களுக்கு இன்னமும் தெரியவில்லையா?

இவரைச் சந்தித்தால் வெட்டொன்று துண்டு இரண்டாக இவர்கள் முன் வைக்கும் கோரிக்கைகளுக்கு நறுக்கென பதிலளிப்பார். தேர்தலின் போது ஒரு கட்சி கூறிய வாக்குறுதிகளை ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்ற ஐந்து ஆண்டுகள் போதாது என்றும், குறைந்தது பதினைந்து ஆண்டுகளாவது ஆட்சியில் இருந்தால் தான் சொன்னவைகளை நிறைவேற்ற முடியுமென்றும் தமது சீன விஜயத்தின் போது அந்நாட்டுத் தலைவர்கள் தம்மிடம் கூறியதாக ரில்வின் சில்வா ஊடகங்களுக்கு தெரிவித்ததன் உள் நோக்கத்தை தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஊழல் ஒழிப்பை தமது தேர்தல்கால வாக்குறுதியாக பிரகடனம் செய்த தேசிய மக்கள் சக்தி அவ்விடயத்தில் தீவிரமாக செயற்பட்டு வருகிறது. இந்தச் செயற்பாடு முன்னைய ஆட்சியாளர்களை மட்டுமன்றி சகல அரசியல் கட்சிகளையும் நிலை குலைய வைத்துள்ளது. முன்னைய பதவி, தகுதி, தராதரம் என்பவற்றுக்கு அப்பால் கைதுகளும், விசாரணைகளும், தடுப்புக் காவல்களும் தொடருகிறது. போதைவஸ்து மன்னர்கள் உலகில் எந்தப் பகுதியில் பதுங்கியிருந்தாலும் கைது செய்யப்படுகின்றனர். இவர்களின் சட்டவிரோத சொத்துகள் அரசுடமையாக்கப்படுகிறது. வங்கிக் கணக்குகள் முடக்கப்படுகின்றன.

இவ்விடத்தில் ஒரு விடயத்தை முக்கியமாக குறிப்பிட வேண்டும். ஊழல் ஒழிப்பு, போதைவஸ்து தடுப்பு விடயங்களில் ஆட்சித் தரப்பு எடுக்கும் எந்த நடவடிக்கைகளையும் மக்கள் எதிர்க்கவில்லை. அமைதியாக ஆதரவு வழங்குகின்றனர். மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறோ, புதிய அரசியலமைப்பை உருவாக்குமாறோ மக்கள் போராட்டம் நடத்தவில்லை. வீதிகளில் இறங்கவில்லை. தோற்றுப் போன, ஊழல் புரிந்த அரசியல்வாதிகளும் அவர்களின் எடுபிடிகளுமே தங்கள் எதிர்ப்பை காட்டி வருகின்றனர்.

அதேசமயம், தனித்துப் போராடி ஆட்சித்தரப்பை ஆட்டங் காணச் செய்ய முடியாது என்ற சிந்தனையில், அனைத்து எதிர்கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சி பல தடவை முன்னெடுக்கப்பட்டது. ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் சுவீகார புத்திரரான ரணில் விக்கிரமசிங்க இம்முயற்சியில் ஒரு முழம் ஏறி பல அடிகள் சறுக்கியிருந்தார். பொதுஜன பெரமுனவுக்கு பிராணவாயு ஏற்றும் அனைத்து முயற்சிகளிலும் நாமல் ராஜபக்சவினால் வெற்றி காணமுடியவில்லை. இப்போது சஜித் பிரேமதாச இக்களத்தை தமதாக்க முயற்சிக்கிறார்.

இவர் முன்னால் விடை காண முடியாத பல கேள்விகள் எழுந்து நிற்கின்றன. கடந்த கால தேர்தல்களில் தம்மை ஆதரித்த தமிழ் – முஸ்லிம் – மலையக கட்சிகளின் ஆதரவு தம்மிலிருந்து நீங்கி வருவதாக அவர் எண்ணுகிறார். புதிதாக உருவான தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் கூட்டை இழக்க இவர் விரும்பவில்லை. இதனால் அதன் பிரதிநிதிகளை அண்மையில் அழைத்து உரையாடியதோடு அதனை ஊடகங்களில் பெரிதளவில் இடம் பெறவும் செய்தார்.

முஸ்லிம் மற்றும் மலையக கட்சிகளின் பிரதிநிதிகள் இச்சந்திப்பில் பங்கு பற்றுவதில் காட்டிய ஆர்வத்தை தமிழரசுக் கட்சி பிரதிநிதிகள் காட்டவில்லை. நிச்சயமாக இது அவருக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் சுமந்திரனின் விருப்புக்கு இணங்க சஜித்தை தமிழரசுக் கட்சி ஆதரித்தது. தமிழர் வாக்குகளை அள்ளி எடுப்பதற்காக தாம் ஜனாதிபதியானால் 13ம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன் என்று நல்லூரில் நடைபெற்ற நிகழ்வில் இவர் தெரிவித்திருந்தார்.

எனினும் தமிழர்களின் வாக்கு பெருமளவுக்கு இவருக்குக் கிடைக்கவில்லை. தமிழ் பொதுவேட்பாளரை தமிழரசுக் கட்சியில் முக்கியமானவர்களே ஆதரித்தனர். இவர்களுள் கட்சியின் தலைவராக போட்டியிட்டு வெற்றி பெற்ற சிவஞானம் சிறீதரன் முதலாவது ஆளாக சஜித்தை பகிரங்கமாக எதிர்த்திருந்தார்.

22ம் திருத்தமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நீதித்துறை சட்ட மசோதாவை வன்மையாக எதிர்ப்பவராக சஜித் தம்மை அடையாளம் காட்டி வருகிறார். இச்சட்ட மூலத்துக்கு இலங்கை வழக்கறிஞர் சங்கம் உட்பட பெரும்பான்மையான பொது அமைப்புகள் ஆட்சேபம் தெரிவிப்பதால் அந்த வட்டகைக்குள் தம்மை உட்படுத்தி லாபம் தேடும் நோக்கம் சஜித்திடம் காணப்படுகிறது.

நாடாளுமன்றத்திலுள்ள அனைத்துக் கட்சிகளதும் (அநுரவின் தேசிய மக்கள் சக்தி உட்பட) 225 எம்.பிக்களுக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் இச் சட்டமூலத்தின் பாதகங்கள் தொடர்பான கருத்துகளை தெரிவிக்கும் ஒரு கூட்டத்தை சஜித் ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் அதனை ஆட்சித் தரப்பு நிராகரித்துவிட்டது. இதனால் இச்சந்திப்பிலிருந்து இலங்கை வழக்கறிஞர் சங்கம் பின்வாங்கிக் கொண்டது.

பொதுவாக இன்றைய அரசியல் நிலைமையைப் பார்க்கின், தமிழர் தேசிய பரப்பில் தமிழரசுக் கட்சி பெரும் பின்னடைவைக் கண்டு கொண்டிருக்கிறது. தமிழ் பேசும் முஸ்லிம் மற்றும் மலையக கட்சிகளுடன் மட்டுப்படுத்தப்பட்ட கூட்டை உருவாக்கிய போதிலும் அது தொடர்ந்து இயங்கக் கூடியதான சைகைகள் காணப்படவில்லை. நாடு தழுவிய ரீதியில் –முக்கியமாக தென்னிலங்கையில் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தி ஊன்றுகோலுடனேயே காணப்படுகிறது.

இதுவே ஜே.வி.பி.யின் தேசிய மக்கள் சக்திக்கான பலமாக மாற்றம் பெற்று வருகிறது. இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளும் போட்டி அடிப்படையில் ஆட்சிபீடத்துக்கு பக்கபலமாக இயங்கி வருகின்றன. இதனால், தேசிய மக்கள் சக்தி மேலும் சில ஆண்டுகளை தேர்தல் இல்லாமல் போனஸாக பெறுமானால் அதனையிட்டு எவரும் ஆச்சரியப்பட நேராது

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

22 ஆகஸ்ட் 2026 முதல் 28 ஆகஸ்ட் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி வைலட் (Violet) வைத்தீஸ்பரன்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதிதி வைலட் (Violet) அவர்களது 7வது ஆண்டு நினைவு நாள் 16 ஆகஸ்ட் 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி வைலட் (Violet) அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 21வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களது 21வது ஆண்டு நினைவு நாள் 21 ஆகஸ்ட் 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கோகிலாம்பாள் விவேகானந்தன்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கோகிலாம்பாள் விவேகானந்தன் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 22 ஆகஸ்ட் 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கோகிலாம்பாள் விவேகானந்தன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவுகள்



### திருமதி சத்தியபாமா கௌரிகுகன்

ஹட்டன் நுவரெலியாவைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சத்தியபாமா கௌரிகுகன் அவர்களது நினைவழியாத நினைவு நாள் 28 ஆகஸ்ட் 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சத்தியபாமா கௌரிகுகன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 36வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம்

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 36வது ஆண்டு நினைவு நாள் 14 செப்டம்பர் 2026 விநாயகர் சதுர்த்தி தினமான திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர், சகோதர்கள் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 32வது 6வேது ஆண்டு நினைவஞ்சலிகள்



### திரு சின்னப்பு சிங்கநாயகம்
### திருமதி பரிமளம் சிங்கநாயகம்

தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 32வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் திருமதி பரிமளம் சிங்கநாயகம் அவர்களது 6வேது ஆண்டு நினைவு நாளுக்காகவும் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 09 செப்டம்பர் 2026 புதன்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு திருமதி சிங்கநாயகம் பரிமளம் இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




24 யூலை 2026 ஞாயிற்றுக்கிழமை 2026 கனடாவில் வசிக்கும் திரு திருமதி சோமநாத் தர்க்கா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஜேரியான் சோமநாத்தின் 12வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வன் ஜேரியான் தனது பெற்றோர்கள் சகோதரியுடன் இணைந்து 09 ஆகஸ்ட் 2026 ஞாயிற்றுக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




11 ஆகஸ்ட் 2026 செவ்வாய்க்கிழமை மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை கந்தையா அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





11 ஆகஸ்ட் 2026 செவ்வாய்க்கிழமை ஆடிஅமாவாசை விரத உபயமாக ஊரெழ கிழக்கைச் சேர்ந்த திரு சின்னப்பு நல்லையா அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 ஆகஸ்ட் 2026 புதன்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது ஆறாம் மாத நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




14 ஆகஸ்ட் 2026 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சுதா மகேந்திரராஜா, அஸ்வின் ஸ்ரீதரன், ஷர்மி விக்னேஸ்வரி ஆகியோர் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




15 ஆகஸ்ட் 2026 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சுதா மகேந்திரராஜா, அஸ்வின் ஸ்ரீதரன், ஷர்மி விக்னேஸ்வரி ஆகியோர் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




15 ஆகஸ்ட் 2026 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சுதா மகேந்திரராஜா, அஸ்வின் ஸ்ரீதரன், ஷர்மி விக்னேஸ்வரி ஆகியோர் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




16 ஆகஸ்ட் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




16 ஆகஸ்ட் 2026 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி வைலட் (Violet) வைத்தீஸ்பரன் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




20 ஆகஸ்ட் 2026 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகள் தமது பிள்ளைகளுடன் இணைந்து நெஞ்சம் நிறைந்த மகிழ்ச்சியில் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள். வாழ்க!




21 ஆகஸ்ட் 2026 வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களது 21வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 ஆகஸ்ட் 2026 சனிக்கிழமை யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கோகிலாம்பாள் விவேகானந்தன் அவர்களது 3வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



27 ஆகஸ்ட் 2026 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி கீர்த்தனா செல்வராஜா அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி கீர்த்தனா செல்வராஜா அவர்கள் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




28 ஆகஸ்ட் 2026 வெள்ளிக்கிழமை ஹட்டன் நவரெலியாவைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சத்தியபாமா கௌரிகுகன் அவர்களது நினைவழியாத நினைவு நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




21 ஆகஸ்ட் 2026 வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களது 21வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# அம்மாக்களுக்குக் கிடைக்காத நீதி எலும்புக் கூடுகளுக்குக் கிடைக்குமா?



நீதிக்கான நீள் பயணம் என்ற தலைப்பில் ஓர் அனைத்துலக மாநாடு இம்மாதம் முப்பதாம் திகதி. யாழ். தந்தை செல்வா கலையரங்கில் இடம் பெறவுள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காகப் போராடும் அம்மாக்கள்.அப்பாக்களின் அமைப்புகள் இந்த மாநாட்டை ஒழுங்கபடுத்தி வருகின்றன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் என்பது இன்று நேற்று தொடங்கியது அல்ல.கு றிப்பாக அம்மாக்களின் போராட்டம் கடந்த 17 ஆண்டுகளாகத்தான் இடம் பெற்று வருகிறது என்பதல்ல.

அது 1984ஆம் ஆண்டிலேயே தொடங்கியது. 1984ஆம் ஆண்டில் இலங்கைத்தீவின் முதலாவது அன்னையர் முன்னணி யாழ்ப்பாணத்தில் தோன்றியது. கைது செய்யப்பட்ட மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்காகப் போராடும் அம்மாக்கள் அந்த முன்னணியை உருவாக்கினார்கள். அங்கிருந்து தொடங்கி கிட்டதட்ட 42 ஆண்டுகளாக அம்மாக்கள் தங்கள் உறவுகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அம்மாக்களின் போராட்டத்துக்கு முடிவே இல்லை. முதலாங் கட்ட ஈழப்போரில் தொடங்கி ஈழப் போர் முடிவுக்கு வந்த பின்னரும் அம்மாக்களின் போராட்டத்துக்கு முடிவு இல்லை. அம்மாக்களுக்கு நீதி கிடைக்கவே இல்லை. இக்கட்டுரை எல்லா விதமான அரசியல் நம்பிக்கைகளையும் பிரதிபலிக்கும் எல்லாவித மான அம்மாக்களையுந் தான் குறிக்கிறது.

ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து விட்டது. ஆனால் அம்மாக்களின் போராட்டத்துக்கு முடிவே இல்லை. அம்மாக்களின் கண்ணீருக்கும் முடிவே இல்லை. தீராத கண்ணீர் தீராத துக்கம்மு டியாத போராட்டம். இவ்வாறு கடந்த 42 ஆண்டுகளாக அம்மாக்களுக்கு நீதி கிடைக்காத ஒரு சமூகத்தில், குறிப்பாக கடந்த 17 ஆண்டுகளாக எல்லாப்போராட்டக் களங்களிலும் அம்மாக்களின் கண்ணீர் சிந்தப்படும் ஓர் அரசியல் களத்தில் செம்மணிக்கு நீதி கிடைக்கும் என்றும் அனைத்துலக விசாரணை நடக்கும் என்றும் எப்படி நம்புவது?

கடந்த 17ஆண்டுகளாக தமிழ்த் தேசியப் பரப்பில் உணர்ச்சிகரமான விடயங்களில் ஒன்று அம்மாக்களின் கண்ணீர். அம்மாக்களின் கதறல். பெரும்பாலான எல்லாப் போராட்டங்களிலும் முன்னணிப் போராளிகள் அவர்கள் தான். பெரும்பாலான எல்லாப் போராட்டங்களிலும் அவர்களுடைய கண்ணீர் தான் போராட்டத்தை உணர்ச்சிகரமானதாகவும் எழுச்சிகரமானதாகவும் மாற்றும். அரசியல் செய்திகள் மற்றும் தகவல்களைப் பின்பற்றுவது

இவ்வாறு கடந்த 17ஆண்டுகளாக போராட்டங்களின் கூர்முனை போல காணப்படும் இந்த அம்மாக்களை, உலகசமூகத்தில் இருந்து வருகிற பெரும்பாலான பிரதிநிதிகள் சந்தித்து வருகிறார்கள். ஐநாவின் முக்கியஸ்தர்கள் தொடக்கம் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் தூதரகங்களின் பிரதிநிதிகள். என்று சொல்லி பெரும்பாலான வெளிநாட்டு பிரதிநிதிகள் இந்த அம்மாக்களைக் கண்டு வருகிறார்கள்.

கண்ணீருடன் காணப்படும் அம்மாக்களின் படங்கள் உலகில் எல்லா ஊடகங்களிலும் முகப்புச் செய்திகளாக வந்திருக்கின்றன. அம்மாக்களின் கண்ணீரும் கதையும் இப்பொழுதும் ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக வருகிறது. ஆனால் அம்மாக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இந்த அம்மா, அப்பாக்களில் வயதாகி முதுமை கண்டு ஒரு தொகுதியினர் இறந்து போய் விட்டார்கள். காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு நீதி கிடைக்காது என்று ஏக்கத்தோடு அவர்கள் இறந்து போய்விட்டார்கள். எனினும் மிஞ்சி இருப்பவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அம்மாக்களில் பெரும்பாலானவர்கள் நடுத்தர வர்க்கம் அல்லது கீழ் நடுத்தர வர்க்கம் அல்லது அதைவிட ஏழ்மை நிலையில் இருப்பவர்கள். இவர்களுக்காக உழைக்க வேண்டிய பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டு விட்டார்கள். இவர்களுக்கென்று குடும்பங்கள் உண்டு. பிள்ளைகள், பேரப்பிளான்பிள்ளைகள் உண்டு. இவர்கள் தங்களுடைய வீடுகளில் இருந்து .பேரப்பிள்ளைகளை கவனிக்கலாம். தமது பிள்ளைகளுக்குத் துணையாக இருக்கலாம். ஆனால் எல்லாவற்றையும் விட்டுவிட்டு நீதிக்காக வீதிகளில் நிற்கிறார்கள்.

இவர்கள் ஒவ்வொரு முறையும் போராட்டக் களத்திற்கு வரும்போது அல்லது. மனிதாபிமான அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கும் போது அல்லது. விசாரணைக் கொமிஷன்களின் பிரதிநிதிகளைச் சந்திக்க வரும்போது அதற்குரிய பயணச் செலவுகளை யார் கொடுக்கிறார்கள்? காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் ஆவணங்களைப் போட்டோ பிரதி எடுப்பதற்கும் காசு வேண்டும். அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு முதிய தாய் சொன்னார் போட்டோ கொப்பி அடிச்சு அடிச்சே வேளாமை செய்த காசெல்லாம் தீர்ந்து போச்சு என்று. வன்னியிலிருந்து விசாரணை கொமிஷனுக்கு வந்த ஒரு தாய் சொன்னார், அன்றைய நாள் சாப்பாட்டுச் செலவை பேருந்துக்குக் கொடுத்து விட்டுப் பசியோடு வந்ததாக.

அந்த முதிய, நொந்த, நோயாளிகளான, இழப்பினாலும் துக்கத்தினாலும் வதங்கிப் போன அம்மாக்களுக்கு பயணச் செலவுக்கும் சாப்பாட்டுச் செலவிற்கும் காசு தேவை. அவர்கள் காற்றை குடித்துக் கொண்டு, வெயிலைக் குடித்துக் கொண்டு போராட முடியாது. அதுவும் முதிய வயதில். அவர்களுடைய குடும்பங்களை யார் கவனிக்கிறார்கள்? இந்த அம்மாக்களின் செலவுகளை யார் கொடுக்கிறார்கள்? கடந்த 17 ஆண்டுகளாக எல்லாப் போராட்டக் களங்களிலும் ரெடிமேட் போராளிகளாக பயன்படுத்தப்படுகின்ற இந்த அம்மாக்களின் நிதி நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு அவர்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கான மையமான அமைப்பு ஏதாவது தாயகத்தில் தமிழ் மக்கள் மத்தியில் உண்டா? தெற்காசிய கலாச்சார நிகழ்வுகளை ஆராய்தல் புலம்பெயர்ந்த சில கட்டமைப்புகள்தான் அவர்களுக்கு உதவி செய்கின்றன. அந்த அமைப்புக்கள் இவர்களை அணிகளாக பிரித்து மோத விடுகின்றன என்ற குற்றச்சாட்டு உண்டு. ஆனாலும் அந்த உதவிகள் தான் கடந்த 17 ஆண்டு கால அம்மாக்களின் போராட்டத்துக்கான பிரதான உந்துவிசை.

இவ்வாறு அம்மாக்களின் கண்ணீருக்கு 17 ஆண்டுகளாக நீதி கிடைக்காத ஒரு சமூகத்தில், கடந்த வாரம் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதற்கான புதிய சட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருக்கும் ஓர் உள்நாட்டு நீதிபரிபாலனச் சூழலில், செம்மணிப் புதைகுழிக்கு நீதி கிடைக்கும் என்றும், அதற்கென்று சர்வதேச விசாரணைக் கட்டமைப்பு உருவாக்கப்படும் என்றும் எப்படி நம்புவது?

17 ஆண்டுகளாக அம்மாக்களின் கண்ணீருக்கு விடையில்லை. ஆனால் இந்த 17 ஆண்டுகளுக்குள்ளும் புதிது புதிதாக போராட்டக் களங்கள் திறக்கப் படுகின்றன. செம்மணிக்கு நீதி கேட்டுப் போராட்டங்கள் பலாலி மயிலிட்டியில் 36 ஆண்டுகளுக்கு முன்பு ஆக்கிரமிக்கப்பட்ட தமது நிலத்தைக் கேட்டுப் போராட்டங்கள் கிழக்கில் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைகளில் ஆயிரம் நாட்களுக்கு மேலாகப்போராட்டங்கள் தையிட்டியில் ஒவ்வொரு முழு நிலா நாளிலும் போராட்டங்கள்.. என்றிவ்வாறாக தமிழ்ச் சமூகத்தில் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

இது தொடர்பாக தொகுக்கப்பட்ட ஓர் அரசியல் பார்வை 'ஓர் அரசியல் வியூகம் தமிழ்த் தேசியப் பரப்பில் இல்லை. இந்த எல்லாப் போராட்டங்களுமே தெட்டம் தெட்டமானவை. ஒரு மையத்தில் இருந்து திட்டமிடப்படாதவை ஒருங்கிணைக்கப்படாதவை. அரசியல் செய்திகள் மற்றும் தகவல்களைப் பின்பற்றுவது

தமிழ்மக்கள் கடந்த 17 ஆண்டுகளாக தமது அரசியலை நீதிக்கான போராட்டம் என்று கூறிக 'கொள்கிறார்கள். ஆனால் நீதிக்கான போராட்டத்தை ஒரு மையத்திலிருந்து திட்டமிட்டு, ஒரு மையத்திலிருந்து அந்தப் போராட்டங்களை ஒருங்கிணைத்து வழிநடத்த யாருமே தயாராக இல்லை. நிதிக்காகப் போராடும் ஒரு மக்கள் அதற்கென்று போராட்ட அமைப்புகளையும் கட்டமைப்புக்களையும் கொண்டிருக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உருவாக்கிய கட்டமைப்புகளையும் ஏற்கனவே நிறுவனமாக உள்ள பல்கலைக்கழக மாணவர்களையும் கையாண்டு போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் போராட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கத் தேவையான அரசியல் இயக்கங்கள் தமிழ்மக்கள் மத்தியில் இல்லை.

இப்பொழுது வடக்கு – கிழக்கில் பெரும்பாலான முருக கோவில்களில் திருவிழாக்கள் நடக்கின்றன. யாழ்ப்பாணம். செல்வச்சந்நிதியில் பெருந்திருவிழா நடந்து கொண்டிருக்கிறது. நல்லூர் பெருந்திருவிழா தொடங்கி விட்டது .கோவில் பெருவிழாக்களை நோக்கி லட்சக்கணக்கில் மக்கள் குவிகிறார்கள். நல்லூர் திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து செல்கின்ற.ய ாழ்ப்பாணத்தை நோக்கி வருகின்ற, பெரும்பாலான எல்லாப் புகையிரதங்களிலும் முன்பதிவு ஆசனங்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு விட்டன. இது புலம் பெயர்ந்த தமிழர்கள் தாயகத்தை நோக்கி வருகிற காலம்.மேலும் பாடசாலைகளுக்கு விடுமுறைக்காலம். எனவே புகையிரதங்களில் முன்பதிவு ஆசனங்கள் முடிந்து விட்டன. அந்தளவுக்கு மக்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி வருகிறார்கள் போகிறார்கள்.

இவ்வாறு லட்சக்கணக்காக தமிழ் மக்கள் கோவில் பெரு விழாக்களில் திரளும் ஒரு சமூகத்தில், ஆயிரக் கணக்காக மக்கள் உணவுப் பெரு விழாக்களை நோக்கியும் வாகனப் பெருவிழாக்களை நோக்கியும் திரளும் ஒரு சமூகத்தில், நீதிக்கான போராட்டத்தில் லட்சக்கணக்கானவர்கள் திரள்வதில்லை.

அதற்குப் பொறுப்பு தமிழ் அரசியலை முன்னெடுக்கின்ற சக்திகள்தான். மக்கள் அல்ல.மக்கள் எப்பொழுதும் அப்படித் தான் இருப்பார்கள். மக்களை அரசியல் உணர்வு மிக்கவர்களாக தங்களுடைய நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தீர்மானிக்கக்கூடிய அரசியல் மீது உணர்திறன் மிக்கவர்களாக மாற்ற வேண்டியது தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுக்கின்ற சக்திகளுடைய பொறுப்பு.ஆனால் அவர்கள் கடந்த (18ம் பக்கம் பார்க்க)

# எதிர்ப்புகளை அதிகரிக்கச் செய்யும் பயணம்

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் விரைவில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளாரெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் திட்டமிடப்பட்ட அவரது இந்தப் பயணம் பிற்பிடப்பட்டிருந்த நிலையில், தற்போது அதற்கான திட்டமிடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த போது, 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் 2ஆம், 3ஆம் திகதிகளில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங் கொழும்புக்கு, இரண்டு நாள் பயணத்தை மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்தார்.

இது தொடர்பாக செப்டெம்பர் முதலாம் திகதி கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் அறிவித்திருந்தது. அந்த அறிவிப்பு வெளியாகி ஆறு மணித்தியாலங்களில்– அன்று இரவே, அவரது பயணம் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. அந்தப் பயணம் பிற்போடப்பட்டதற்கான காரணம் எதுவும் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

ஆனால் அப்போது இலங்கையில் நிலவிய சீரற்ற காலநிலையே பயணம் பிற்போடப்பட்டதற்கான காரணமாகக் கூறப்பட்டது. ஏனென்றால், இந்திய பாதுகாப்பு அமைச்சரின் அந்தப் பயணத் திட்டத்தில் கண்டி மற்றும் திருகோணமலைக்கான பயண ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அந்தப் பயணம் திட்டமிடப்பட்டிருந்த சூழலில், சீனா தனது, யுவான் வாங் 6 என்ற ஆய்வு கப்பலை கொழும்பு துறைமுகத்தில் நிறுத்துவதற்கு அனுமதி கோரியிருந்தது. அது குறித்து இந்தியாவும் அறிந்திருந்தது.

இந்தியாவின் அழுத்தங்களை அடுத்து, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் சீன ஆய்வுக் கப்பலுக்கு அனுமதி கொடுத்திருக்கவில்லை.

சீனாவின் ஆய்வுக் கப்பல்கள் தொடர்பான சர்ச்சை கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளில் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் தான், அந்தப் பயணத்துக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டது.

இந்தச் சிக்கல்களை அடுத்து, ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தினால் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எந்தவொரு வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்களும் இலங்கை கடற்பரப்பில் ஆய்வில் ஈடுபட அனுமதிக்கப்படாது என ஒரு வருடத் தடையை அறிவித்ததன் மூலம், இந்த இழுபறிக்கு தற்காலிக தீர்வு எட்டப்பட்டது. தெற்காசிய கலாச்சார நிகழ்வுகளை ஆராய்தல்

இந்த ஓராண்டு தடை 2024 ஆம் ஆண்டு இறுதியில் முடிவுக்கு வந்த போது, புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திசாநாயக்க, அந்த தடையை நீடிக்கவில்லை.

வெளிநாட்டு கப்பல்கள் தொடர்பான புதிய செயற்பாட்டு நடைமுறைகள் உருவாக்கப்பட்டு வருவதாக அநுர அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து கூறி வருகிறது. ஆனால் இது வரையில் அந்த செயற்பாட்டு நடைமுறைகள் நடைமுறைக்கு வரவில்லை. பகிரங்கப்படுத்தப்படவும் இல்லை.

வெளிவிவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு ஆகியன இணைந்து தயாரித்த இந்த செயற்பாட்டு நடைமுறை, புதுடில்லியின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டதாக வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் கூறியிருந்தார்.

அதற்குப் பின்னர் என்னவானது, அடுத்து என்ன நடக்கப் போகிறது என்ற எந்த தெளிவான விளக்கமும் அரசாங்கத்திடம் இருந்து வெளி வரவில்லை. இப்போது, இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கொழும்புக்கு மேற்கொள்ளவுள்ள பயணத்தின் போது, அவர் கண்டி மற்றும் திருகோணமலை மீது கவனம் செலுத்தக் கூடும் என தெரிகிறது.

இந்த பயணத்திட்டம் இன்னமும் இறுதி செய்யப்பட்டதாக தகவல் இல்லை. கடந்த 14 ஆம் திகதி இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா இந்திய தூதரக பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் துணை பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருடன் பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தாவை சந்தித்து, இந்த பயண நிகழ்ச்சி நிரல் தொடர்பாக கலந்துரையாடியிருந்தார்.



இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகள் முன்னெபோதும் இல்லாத அளவுக்கு, வலுவான நிலையில் இருப்பதாக, இரண்டு நாடுகளும் கூறிக் கொள்கின்றன. இரண்டு நாடுகளும் இணைந்து கூட்டு பயிற்சிகளை முன்னெடுக்கின்றன.

பாதுகாப்பு தொடர்பான தகவல் பரிமாற்றங்கள், புலனாய்வு தகவல் பகிர்வுகள், பயிற்சி ஒத்துழைப்புகள் மற்றும் பல்வேறு விடயங்களில் இரு தரப்பு உறவுகள் உச்ச நிலையில் இருப்பதாக சொல்லப்படுகிறது.

ஆனாலும் இரண்டு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு எதுவும் பகிரங்கமாக கையெழுத்திடப்படவில்லை. சில புரிந்துணர்வு உடன்பாடுகள் இருந்தாலும் அவையும் வெளிப்படுத்தப்படாத நிலை உள்ளது.

இரு தரப்பு பாதுகாப்பு உறவுகளை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வது குறித்து, பேச்சுக்களை முன்னெடுப்பதில் இந்திய பாதுகாப்பு அமைச்சரின் பயணத்தின் போது, கவனம் செலுத்தப்படும் எனத் தெரிகிறது.

அண்மையில், கொழும்புக்கு பயணம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் விக்ரம் மிஸ்ரியிடம் இலங்கை அரசாங்கம் பாதுகாப்பு உத்தரவாதம் ஒன்றை வழங்கியிருந்தது.

இலங்கையின் கடற்பரப்பையோ அல்லது தரையையோ, இந்தியாவுக்கு எதிராக பிற நாடுகள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கமாட்டோம் என்ற உத்தரவாதம் மீண்டும் உறுதி செய்யப்பட்டது. ஏற்கெனவே இந்த உத்தரவாதம் புதுடில்லியில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் 2004ஆம் ஆண்டு இறுதியில் இந்தியாவுக்கு வழங்கப்பட்டது. இப்போது அது மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த வாக்குறுதியை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்வதில் இந்தியா ஆர்வத்துடன் இருக்கிறது. ஏனென்றால் மாறிவரும் பூகோள அரசியல் மாற்றங்களின் காரணமாக இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடுகளில் மாற்றம் ஏற்படுமா என்ற சந்தேகம் இந்தியாவுக்கு இருக்கிறது. தற்போதைய அரசாங்கம் சீன சார்புடையதாக இருக்கும் என நம்பப்பட்ட போதும், உறுதியான அந்த நிலைப்பாட்டை எடுக்க முடியாத சுசூழல் ஏற்பட்டது.

நாட்டின் பொருளாதார நிலை கருதி, அமெரிக்காவையும் இந்தியாவையும் சார்ந்து செயற்பட வேண்டிய நிலை காணப்பட்டது. அதற்கேற்ப நெகிழ்ந்து கொடுக்கும் போக்கை கையாளுகிறது. இதேபோல, இந்தியா சார்ந்த விடயங்களில், திடீரென கொழும்பு மாற்று முடிவை எடுப்பதற்கும் அதிக நேரம் எடுக்காது என்ற கருத்து புதுடில்லியிடம் ஏற்பட்டிருக்கலாம்.

சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப தீர்மானங்களை மாற்றிக் கொள்வதில் கொழும்பு கவனமாக இருப்பதாக புதுடில்லி நம்பினால் அத்தகைய அச்சம் அதற்கு ஏற்பட்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் இலங்கைப் பயணம் இந்தியாவின் நலன்களை– குறிப்பாக பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்தும்.

திருகோணமலை மீதான இந்தியாவின் கவனக் குவிப்பை அது மேலும் உறுதி செய்வதாக இருக்கலாம். இந்தியாவை பொறுத்தவரையில் இலங்கையில் தனது தளம் அமைவதை விட இலங்கையை பிற நாடுகள் பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்வதிலேயே கவனம் செலுத்துகிறது.

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இந்தியாவின் இந்த கவனத்தைத் தாண்டி சீனா போன்ற பல நாடுகள் தலையீடுகளை செய்து வருகின்றன.

பாகிஸ்தான், துருக்கி போன்ற நாடுகளும் கூட இந்தியாவுக்கு கவலையளிக்கும் நகர்வுகளை முன்னெடுக்கின்றன. இலங்கையுடன் இந்த நாடுகள் நட்புறவை வலுப்படுத்தி இருக்கின்றன.

அண்மையில் துருக்கி பாகிஸ்தான் – சவுதிஅரேபியா ஆகிய நாடுகள் செய்து கொண்ட ஒரு பாதுகாப்பு உடன்பாட்டின் படி, ஒரு நாட்டின் மீதான தாக்குதல் மற்ற நாட்டின் மீதான தாக்குதலாக கருதப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறாயின், பாகிஸ்தான் மீதான எந்தவொரு நடவடிக்கையும் மற்ற இரு நாடுகளின் மீதான ஆக்கிரமிப்பாகவே எடுத்துக் கொள்ளப்படும். இது இந்தியாவுக்கு நெருக்கடியான ஒரு விடயம்.

ஏனென்றால் துருக்கியுடன் அது அண்மைக் காலத்தில் இராஜதந்திர மோதல்களில் ஈடுபட்டாலும் சவுதி அரேபியாவுடன் பாதுகாப்பு மற்றும் பொருளாதார உறவுகளை வலுவாக பேணி வருகிறது. மேற்படி ஒப்பந்தம் இந்தியாவுக்கு சிக்கலான ஒரு சூழலை தோற்றுவித்திருக்கிறது.

இலங்கைக்கு ட்ரோன்களை விற்பதற்கு துருக்கி முயன்று கொண்டிருக்கிறது. இலங்கையை தாண்டி வங்காள விரிகுடாவில் தனது நீர்மூழ்கிக் கப்பலை நிறுத்துவதற்கு பாகிஸ்தான் முற்படுகிறது.

இவ்வாறாக, இந்தியாவின் கரிசனைகள் தனியே சீனாவை மையப்படுத்தியதாக இல்லாமல், அதற்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வேறு பல நாடுகளில் இருந்தும் வரத் தொடங்கி இருக்கிறது.

சீனாவின் நிலையும் குறைந்து மதிப்பிடக் கூடியதல்ல. சீனா இப்போது கொழும்பில் பயணிகள் ட்ரோன் சேவையை தொடங்குவதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கிறது. இந்த ட்ரோன் தொழில்நுட்பம் கூட இந்தியாவினால் சாதகமாக நோக்கப்படும் ஒன்றாக இருக்காது.

இதற்காக பயன்படுத்தப்படும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்கள், தரவு பாதுகாப்பு போன்ற விடயங்களில் இந்தியா கவலைப்பட ஏராளம் விடயங்கள் உள்ளன. இந்த சூழலில் இலங்கையை தக்க வைத்துக் கொள்வது இந்தியாவுக்கு முக்கியமானது.

பாதுகாப்பு ரீதியாக இலங்கையுடனான உறவுகளை பேணிக் கொள்வதற்கு, ராஜ்நாத் சிங்கின் இந்த பயணம் நிச்சயமாக பயன்படுத்திக் கொள்ளப்படும். இவற்றின் அடிப்படையிலேயே அவர் மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் தனது பயண நிகழ்ச்சி நிரலை ஒழுங்கு செய்திருக்கிறார்.

# காலத்தைத் தவற விட்டவர்களின் அரசியல்?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –





1991ஆம் ஆண்டிலிருந்து சோமாலிலாந்து தனிநாட்டுக்கான அங்கீகாரத்தை கோரிய போதிலும், எந்தவொரு நாடும் அதற்கான அங்கீகாரத்தை வழங்கவில்லை. ஆனால் அவர்கள் தொடர்ந்தும் தங்களை பேணிப் பாதுக்காத்து வந்தனர். தற்போது ஆபிரிக்க நாடுகளில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வரும் நிலையில் தனது மூலோபாய மற்றும் பொருளாதார நலன்களுக்காக இஸ்ரேல் அதனை ஒரு நாடாக அங்கிகரித்து, ஜக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடு ஒன்று, சோமாலிலாந்தை அங்கீகரித்திருப்பது இது தான் முதல் தடவை.

தமிழரின் இன்றைய அரசியல் நிலைமையை உற்று நோக்கும் போது, இரண்டு கூற்றுக்கள் அவ்வப்போது நினைவுக்கு வருவதுண்டு. இரண்டுமே கவிஞர்களின் வரிகள் தான். ஒன்று, கவிஞர் புதுவை இரத்தினதுரையின் சொற்கள். அடுத்தது, கி.பி.அரவிந்தனுடையவை. இருவருமே எனக்கு நண்பர்களாக இருந்தவர்கள். இப்போது நம்முடன் இல்லை.

காலத்தை தவற விட்டால் கண்டவன் எல்லாம் கதவை தட்டுவான்' இந்த வரிகள் புதுவையினுடையது. புதுவை வாழ்ந்த காலத்தில், தமிழ் தேசியக் கவி

என்று அடையாளப்படுத்தப்பட்ட ஒருவர். வாழும் போது, மிகவும் கம்பீரமாக இருந்த கவிஞன். அந்த கம்பீரத்திற்கு அவர் சார்ந்திருந்த அமைப்பின் அதிகாரமும் புகழும் தான் பிரதான காரணம்.

ஆனால் இந்த வரிகளை அவர் யாரை நினைத்து எழுதினாரோ, எதனை மனதில் கொண்டு எழுதினாரோ நாமறியோம், ஆனால் இந்த வரிகள் ஈழத் தமிழர்களுக்கு மிகவும் அச்சொட்டாக பொருந்திப் போகின்றது. எல்லாக் காலத்திலும் பொருந்தி விடுவோமோ என்பது தான் இந்தக் கட்டுரையாளரின் கவலை.

அடுத்தது, கவிஞர் கி.பி.அரவிந்தன். அவர் ஈரோஸ் இயக்கத்தின் முன்னோடிகனில் ஒருவர். போர் முடிவுக்கு பின்னர், மிகவும் சோர்வுற்று, எல்லாம் போச்சுது என்னும் தலைகுனிவோடு, அவர் கவலையில் பேசிய நாட்களில், அவருடன் பல தடவைகள் பேசியிருக்கின்றேன். அவர் இறுதிக் காலத்தில் எழுதிய வரிகளில் இந்த ஒன்று தான், எனது நினைவில் அடிக்கடி வந்து போவதுண்டு

அந்த வரிகள் 'மிச்சமென்ன சொல்லுங்கப்பா?' இந்த வரியும் ஈழம் தமிழர்களுக்கு எல்லாக் காலத்திலும் பொருந்தி விடுமோ என்னும் அச்சமும் இந்தக் கட்டுரையாளரிடம் உண்டு. ஏனெனில்யுத்தம் முடிவுற்று, பதினேழு ஆண்டுகளாகவிட்ட போதிலும் கூட, மிச்சமென்ன சொல்லுங்கப்பா என்னும் வரிகளைத் தாண்டி தமிழர் அரசியல் ஒரு இஞ்சி கூட நகரவில்லை.

ஆண்டுகள் தோறும் முள்ளிவாய்க்காலில் கூடுவதையும், விடுதலைப் புலிகளின் கல்லறைகளில் சங்கமிப்பதையும் தாண்டி, அரசியல் நகர்ந்தமைக்கு சான்றில்லை. இப்படி நான் கூறுகின்ற போது சிலர் கோபப்படுகின்றனர். எழுத்துக்கள் நம்பிக்கையூட்ட வேண்டும் மாறாக அவநம்பிக்கையை விதைக்கக் கூடாது என்கின்றனர். எனக்கும் நம்பிக்கையூட்டத் தான் விருப்பம், ஆனால் இல்லாத ஒன்றை முன்வைத்து எவ்வாறு நம்பிக்கையூட்ட முடியும்? இருப்பதை சரியாக புரிந்து கொண்டால் தானே அடையவிரும்பும் ஒன்றை நோக்கி, ஆகக் குறைந்தது, சிறு முயற்சிகளையாவது முன்னெடுக்க முடியும். அல்லது அதனை அடையவே முடியாது என்னும் யதார்த்தத்தையாவது புரிந்து கொள்ள முடியும். அந்த அடிப்படையில் தான் இந்த அரசியல் மாணவன், எப்போதும், இருப்பதைப் பற்றிய உண்மைகளின் வழியாக அரசியலை கற்றுக்கொள்ள முயற்சிக்கின்றான்.

தமிழரின் பேராட்டங்கள் முற்றிலும் நியாயமானது. ஆனால் ஒரு மக்கள் கூட்டத்தின் போராட்டம் நியாயமானது, அதில் தர்மமுள்ளது, என்பதலாயே அந்தப் போராட்டம் வெற்றி பெற்று விடுவதில்லை. நியாயத்திற்காகவும், நீதிக்காகவும் ஒரு தரப்பு வெற்றி பெற்றுவிடும் என்றால், நீதிக்காகவும் நியாயத்திற்காகவும் வீதிக்கு வந்தவர்கள் அனைவருமே வெற்றி பெற்றிருக்க வேண்டும் ஆனால் அப்படியான உதாரணங்கள். வரலாற்றில் இல்லை. என்ன தான் நீதியும் நியாயமும் ஒரு மக்கள் கூட்டத்திடம் இருந்தாலும் கூட, வெளியாரின் ஆதரவும், சூழ்நிலையை புரிந்து கொண்டு செயற்படும் திறனும் இல்லாவிட்டால் பாதிக்கப்பட்டவருக்கான நீதி என்பது, எப்போதும் எட்டாக் கனிதான். இன்று தமிழருக்கு நடந்திருப்பது இது தான். தமிழரின் வாதங்களில், போராட்டங்களில், நியாயம் இருந்தது, அர்ப்பணிப்பு இருந்தது, தியாகங்கள் இருந்தது

ஆனால் தமிழர்களால் அரசியல்ரீதியில் எதனையும் அடைய முடியவில்லை. தொடர்ந்தும் தோல்வியை மட்டுமே சந்தித்ததன் விளைவாக, இன்று எதனை நோக்கிச் செல்வது என்பதையே உணர்ந்து கொள்ள முடியாதளவிற்கு, தமிழர்களின் அரசியல் லாழ்வு மிகவும் பலவீனமாக இருக்கின்றது. இந்த இனம் தானா, விடுதலைக்காக போராடிய இனம், என்று கேள்வி கேட்க வேண்டிய நிலையிலேயே இன்றைய தமிழரின் நிலைமை இருக்கின்றது.

பணம் உள்ளவர் எல்லாம் தலைவன் என்பதாகவே மக்கள் அரசியலை புரிந்து கொள்ள முற்படுகின்றனர். கருவாடு விற்ற பணம் மணப்பதில்லை

என்பது போல் என்ன வழிகளில் உழைத்தாலும் அது பிரச்னையில்லை ஆனால் கட்சியின் பெட்டிகளை நிரப்பும் தகுதியுள்ளவர்களே, வேட்பாளர்கள், என்பதே இன்றைய கட்சிகளின் நிலைமை.

இந்த இடத்தில் தான் காலத்தை தவற விட்டால் கண்டவன் எல்லாம் கதவை தட்டுவான் என்னும் வரிகள் தமிழரின் இன்றைய அரசியலுக்கு பொருந்திப் போகிறது. இந்த இடத்தில் எழும் கேள்வி – இந்த நிலைமைக்கு யார் காரணம். தமிழரின் நியாயமான

போராட்டமும், அதற்கான அர்ப்பணிப்பும் சில வரலாற்று வாய்ப்புக்களை வழங்கியிருந்தது. ஆனால் அதனை பயன்படுத்திக் கொள்ளும் ஆளுமையுடன் தமிழர் தலைமைகள் இருந்திருக்கவில்லை. அண்மையில் சோமாலிலாந்து என்னும் உத்தியோபூர்மற்ற நிர்வாகத்தை, இஸ்ரேல் ஒரு தனி நாடாக அங்கீகரித்திருக்கின்றது. அதனுடன் இராணுவ பொருளாதார ஒத்துழைப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றது. தற்போது அமெரிக்காவும் சோமாலிலாந்தை அங்கீகரிக்கும் நிலைமை உருவாக்கி வருகின்றது. 1991ஆம் ஆண்டிலிருந்து சோமாலிலாந்து தனிநாட்டுக்கான அங்கீகாரத்தை கோரிய போதிலும், எந்தவொரு நாடும் அதற்கான அங்கீகாரத்தை வழங்கவில்லை. ஆனால் அவர் கள் தொடர்ந்தும் தங்களை பேணிப்பாதுக்காத்து வந்தனர். தற்போது ஆபிரிக்க நாடுகளில் சீனாவின் செல்வாக்கு அதி–கரித்துவரும் நிலையில் தனது மூலோபாய மற்றும் பொருளாதார நலன்களுக்காக இஸ்ரேல் அதனை ஒரு நாடாக அங்கிகரித்து, ஜக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடு ஒன்று, சோமாலிலாந்தை அங்கீகரித்திருப்பது இதுதான் முதல் தடவை.

இந்த இடத்தில் மேற்படி நிகழ்வை, இந்திய – இலங்கை ஒப்பந்தத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்போமானால், எவ்வாறு ஒரு அருமையான வாய்ப்பு தவற விடப்பட்டிருக்கின்றது என்பதை இலகுவாக புரிந்து கொள்ள முடியும். அன்று மாகாண சபையை ஏற்றிருந்தால், இன்று ஒரு வேளை தனிநாட்டுக்கு அருகில் சென்றிருக்கலாம். ஆனால், தூர நோக்கற்ற அரசியல் புரிதல்களாலும் தலைமைத்துவ போட்டியாலும் அந்தவாய்ப்பு வீணாகிப் போனது. அரசியலில் ஒரு அரிய வாய்ப்பு தவறவிடப்படுமானால், அதன் பின்னர் அவ்வாறான வாய்ப்பு ஒரு போதும் கிடைக்காது.

இன்றைய நிலை என்ன மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குக் கூட இந்தியாவின் தயவைத்தானே வேண்டி நிற்கின்றீர்கள். காலம் மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்கியது. இந்த வாய்புக்கள் எவையுமே, அதிஸ்டத்தாலோ அல்லது எவருடைய கருணையினாலும் வரவில்லை. மாறாக, தமிழ் இளைஞர்களின் அர்ப்பணிப்பு மிக்க போராட்டங்களினால் தான் வந்தது. இந்திய–இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னால், அனைத்து இயக்கங்களினதும் அர்ப்பணிப்பும் தியாகங்களும் இருந்தது. அது தான் அந்த ஒப்பந்தத்தை நோக்கி இந்தியாவை கொண்டு வந்தது. இந்தியா அதன் நலன்களை கருத்தில் கொண்டிருக்கலாம்

இந்தியா மட்டுமல்ல எந்தவொரு பலம் பொருந்திய நாடும் அதன் நலன்களை நிறுத்துப் பார்க்காமல் எந்தவொரு விடயத்திலும் தலையீடு செய்யாது. ஆனால் அதனை எங்களுடைய நலன்களின் வழியாக எவ்வாறு புரிந்து கொள்வது, எவ்வாறு அதனை பயன்படுத்திக் கொள்வது என்பதில் தான் பாதிக்கப்பட்ட மக்களை பிரதிநித்துவம் செய்யும் தலைமைகளின் திறமை அடங்கியிருக்கின்றது.

அடுத்தது, மேற்குலக தலையீட்டின் கீழ் இடம் பெற்ற சமாதான உடன்பாடு. அந்த சமாதான உடன்பாடு ஏற்பட்ட உடனேயே ஒன்று விளங்கியிருக்க வேண்டும். அதாவது, அவர்கள் எவரும் உங்களின் மச்சான்கள் அல்லர் உங்களுக்காக பார்த்து ஏதாவது செய்வதற்கு. அது ஒரு உலகளாவிய அரசியல் வியூகத்தோடு சம்மந்தப்பட்டது என்பதை புரிந்து கொண்டு, அதற்கேற்ப விடயங்கள் கையாளப்பட்டிருக்க வேண்டும்.

நாங்கள் மண்டியிடவில்லை என்று கதை வசனம் எழுதிக் கொண்டிருப்பதால், நாங்கள் எழுந்து விட முடியுமா? உண்மையில் அன்று விடுதலைப் புலிகள் அமைப்பிடம் இருந்த பேரம் பேசும் பலத்தை, முழு அளவில் அரசியல் பலமாக்கியிருந்தால், பெறக் கூடியமை உச்சமாக பெற்றிருக்கு முடியும். அதில் ஏராளம் சவால்கள் இருந்தது உண்மை.

இந்தியாவின் அதிருப்தியை பெற்றிருந்ததால், அதனை சமாளிக்க அதிக தூரம் பயணிக்க வேண்டியிருந்திருக்கலாம் ஆனால் முற்றிலும் உருத் தெரியாமல் அழிந்து போவதை விடவும், பொறுமையுடன் காத்திருப்பதும், சூழ்நிலையை கையாளுவதும் உத்தமம் தானே. ஆனால் அந்த வாய்ப்பும் கை நழுவிப் போனது.

இந்த நிலையில் தான் கி.பி.அரவிந்தனின் வரிகள் பொருந்திப் போகிறது மிச்ச மென்ன சொல்லுங்கப்பா? இது பற்றி பேசுவதால் என்ன பயன் என்னும் கேள்வி எழலாம். ஆனால் முன்னர் எவ்வாறு அரசியலை தூரநோக்கின்றி, புரிந்து கொள்ளத் தவறினோமோ, அதனை மீண்டும் செய்து விடக் கூடாது, என்னும் பாடத்தை படிப்பதற்கு, இந்தத் திரும்பிப் பார்த்தல் பயன்படுமல்லவா! எதிர்காலத்தை வரையறுக்க விரும்பினால் கடந்த காலத்தை படிப்பது அவசியம். இல்லா விட்டால் ஈழத் தமிழரின் அரசியல் என்பது எப்போதுமே, காலத்தை தவற விட்டவர்களின் கதையாக மட்டுமே தொடரும். மிச்சமென்ன சொல்லுங்கப்பா.

# கல்முனை ஆஸ்பத்திரி விவகாரம்:- குணமாக்கப்படாத காயங்கள்?

கல்முனை மருத்துவமனையில் புதிதாக நியமனம் பெற்ற பெண் சுகாதாரத் துறை உதவியாளர்கள் ஹிஜாப் அணிந்து வந்தமை தொடர்பாக



மருத்துவமனை நிர்வாகம் எடுத்த நடவடிக்கையும் விளைவுகளும் இரண்டு சமூகங்களுக்கும் இடையிலான முரண்பாட்டைப் புதுப்பித்திருக்கிறதா?

அவர்கள் தாதியர்கள் அல்ல. சுகாதாரத் துறை உதவியாளர்கள். தாதியர்களுக்கு என்று உலகளாவிய சீருடை உண்டு. இலங்கையில் உள்ள எல்லாத் தாதியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் சீருடை கண்டிப்பானது. ஆனால் கல்முனையில் பிரச்சினைப்பட்டது தாதியர்கள் அல்ல. அவர்கள் சுகாதாரத் துறை உதவியாளர்கள். புதிதாக நியமனம் பெற்றவர்கள். அவர்கள் முதல் நாள் மருத்துவமனைக்கு வந்த பொழுது அவர்களில் ஐந்து பேர் ஹிஜாப் அணிந்திருந்தார்கள்' நிர்வாகம் அதனைச் சுட்டிக் காட்டிருந்த பின்னணியில் அடுத்த நாள் வரும் பொழுது அவர்கள் 9 பேரும் ஹிஜாப் அணிந்து வந்திருக்கிறார்கள். நிர்வாகம் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கிறது.

இது இரண்டு சமூகங்களுக்கும் இடையிலான முரண்பாடாக வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது. விளைவாக இரண்டு சமூகங்களுக்கும் இடையிலான ஏற்கனவே ஆழமாகப் புரையோடிப் போயிருந்த முரண்பாடுகள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் அந்த ஒன்பது ஊழியர்களையும் அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனைக்கு மாற்றியிருக்கிறது. அங்கே அவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்பு உபசாரம் நடந்திருக்கிறது. அதுவும் இரண்டு சமூகங்களுக்கும் இடையிலான முரண்பாட்டைப் பிரதிபலிக்கும் ஒரு விடயந் தான்.

இந்த விவகாரம் பின்வரும் நான்கு விடயங்களை வெளியே கொண்டு வந்திருக்கிறது. முதலாவது விடயம், தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கு இடையிலான சந்தேகங்களும் பயங்களும் கசப்பும் வெறுப்பும் ஆறாத காயங்களும் எந்தளவுக்கு நீறு பூ த்து கிடக்கின்றன என்பது.

இரண்டாவது விடயம், இலங்கைத் தீவின் சுகாதாரத் துறை சற்று நிருபங்களில் திருத்தங்கள் வேண்டியிருப்பது.

மூன்றாவது விடயம். அரசாங்கம் இந்த விவகாரத்தைத் தீர்க்க விரும்பவில்லை. அல்லது அரசாங்கத்துக்குக் தீர்க்கத் தெரியவில்லை. நான்காவது விடயம், ஆறு கட்சிகள் சேர்ந்து உருவாக்கிய கூட்டு எங்கே போனது? என்ற கேள்வி.

மேற்சொன்ன விடயங்களைச் சற்று விரிவாகப் பார்க்கலாம். முதலாவது, தமிழ் முஸ்லிம் உறவுகள் எந்த அளவுக்குப் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது. இது ஏற்கனவே கதிர்காமம் பாத யாத்திரைக்குப் போன சுப்பிரமணியன் எனப்படும் நாயின் விவகாரத்திலும் வெளிப்பட்டது. இப்பொழுதும் கல்முனை மருத்துவமனை விவகாரத்திலும் வெளிப்படுகிறது. இல்லாத ஒன்று திடீரென்று கிளம்பவில்லை. ஏற்கனவே இருப்பது தான். நீறுபூ த்துக் கிடப்பது தான் காற்று வீசும்போது பற்றி எரிகிறது. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து 17 ஆண்டுகளின் பின்னரும் இரண்டு சமூகங்களுக்கும் இடையில் மனம் திறந்த உரையாடல் எதுவும் நடக்கவில்லை.

இரண்டாவது விடயம் .சுகாதாரத் துறை சார்ந்த ஆடை விதிமுறைகள் பற்றியது. இதுதொடர்பாக ஒரு மருத்துவ நிர்வாகி கூறினார்.இந்த விடயத்தில் சீருடையா? அல்லது டிரஸ் கோட்டா-ஆடை ஒழுக்க விதியா? என்பதனை தீர்மானித்தால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று. சீருடை என்பது இறுக்கமானது. டிரஸ் கோட் என்றால் அவரவர் தன்னுடைய பண்பாட்டு அடையாளங்களைப் பேணும் அதேசமயம் பொதுவான துறைசார் ஆடைகளுக்குரிய விதிகளையும் பேணலாம்.அதாவது டிரஸ் கோட்டில் நெகிழ்ச்சி இருக்கும். யூ னி.:போர்ம் என்றால் அங்கே நெகிழ்ச்சி இருக்காது. பிரித்தானியா போன்ற நாடுகளில் டிரஸ் கோட் தான் நடைமுறையில் உள்ளது என்பதனை அந்த மருத்துவ நிர்வாகி சுட்டிக் காட்டினார். இதை அரசாங்கம் தான் முடிவு செய்ய வேண்டும்.

மூன்றாவது விடயம். அரசாங்கம் இந்த விவகாரத்தை எப்படிக் கையாண்டது என்பது. அரசாங்கம் ஏற்கனவே வழங்கப்பட்ட சுற்று நிருபத்தின் அடிப்படையில் நிர்வாகத்துக்குச் சாதகமாக முடிவெடுப்பதா? அல்லது சுற்று நிருபத்தை இறுக்கமாகப் பேணுவதன 'மூலம் சமூகப் பிரிவுகளுக்கு இடையிலான நல்லிணக்கம் சிதைய முன்னர் அவசரமான உடனடியான முடிவை எடுக்கத் துணியவில்லை. அதுமட்டுமல்ல, காலம் தாழ்த்தி எடுக்கப்பட்ட அமைச்சு மட்ட முடிவும் கூட பிரச்சினையை ஒத்திவைப்பது தான். அந்தப் பகுதியில் ஏற்கனவே தமிழ் ஆஸ்பத்திரி'', முஸ்லிம் ஆஸ்பத்திரி என்ற பிரிவு ஆழமாக உண்டு. பிரச்சினைக்குள்ளான சுகாதாரத்துறை உதவியாளர்கள் இப்பொழுது முஸ்லிம் ஆஸ்பத்திரிக்கு அதாவது அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். அதாவது தமிழ் ஆஸ்பத்திரியில் பிரச்சனை வந்த பொழுது அவர்கள் முஸ்லிம் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

நான்காவது ஆறு கட்சிகளின் மேடை. தமிழ் பேசும் சமூகங்களுக்கு இடையிலான பொதுவான பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்கான ஒரு மேடையாக அதைப் பயன்படுத்தப் போவதாக கட்சித் தலைவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்கள். ஆனால் கதிர்காமத்துக்குப் போன சுப்பிரமணியன் விவகாரத்தின் விளைவுகளைக் குறித்து 6 கட்சித் தலைவர்களில் அநேகர் வாயைத் திறக்கவில்லை.

அப்படித் தான் இப்பொழுது கல்முனை ஆஸ்பத்திரி விடயத்தில் ஆறுகட்சி மேடை பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆறு கட்சி மேடைக்குள்ள நடைமுறைச் சாத்தியமான முக்கியத்துவங்களில் ஒன்று, தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கு இடையிலான வெளிப்படைத் தன்மை மிக்க மனந்திறந்த உரையாடலைத் தொடங்குவதற்கான ஒரு மேடையாக அதைப் பயன்படுத்தலாம் என்பது. ஆனால் இரண்டு சமூகங்களுக்கும் இடையில் ஆழமான வெறுப்பைப் பிரதிபலிக்கும் ஒரு விடயத்தில் மௌனம் காத்ததன் மூலம் அந்த மேடை அதற்கு பொருத்தமானதா



என்ற கேள்வி இப்பொழுது எழுகிறது. தமிழ்-முஸ்லிம் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் அதுதொடர்பான கருத்துக்களைத் தெரிவிப்பதன்மூலம் தமது சமூகம் சார்ந்த வாக்கு வங்கியைச் சோதனைக்குள்ளாக்க விரும்பவில்லையா? பொருத்தமான, துணிச்சலான முடிவுகளை எடுத்து தமது சமூகங்களை

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



வழிநடத்த முடியாத தலைவர்களா? இரண்டு சமூகங்களைச் சேர்ந்தவர்களும் சமூக ஊடக வலைத்தளங்களில் பாரதூரமான விதங்களில் மோதிக் கொண்டிருந்த போது ஆறு கட்சிகளின் மேடை அதை ஒரு சாட்சி போல பார்த்துக் கொண்டிருந்தது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரான மனோ கணேசன் முகநூலில் இனநல்லிணக்க நோக்கு நிலையிலிருந்து கருத்துத் தெரிவித்துள்ளார். அது ஆறு கட்சிக் கூட்டின் உத்தியோகபூர்வ நிலைப்பாடா? இது எதனைக் காட்டுகிறது என்றால்.அந்தக் கூட்டின் இயலாமையை மட்டுமல்ல, இறந்த காலத்தின் கசப்பான வெறுப்பு மிகுந்த காயங்களில் இருந்தும், பழிவாங்கும் உணர்ச்சியில் இருந்தும் இரண்டு சமூகங்களையும் மீட்டெடுக்கும் வல்லமை படைத்த, அதாவது பண்புரு மாற்றத்துக்குத் தலைமை தாங்கவல்ல தலைவர்கள் இரண்டு சமூகங்கள் மத்தியிலும் இல்லை என்பதைத் தான். மாற்றத்தை வாக்களித்து ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியும் அப்படிப்பட்ட பண்புரு மாற்றத்திற்குத் தலைமை தாங்கும் கொள்ளளவோடு இல்லை என்பதைத் தான்.

எனவே மேற் சொன்னவைகளைத் தொகுத்துப் பார்த்தால் தெளிவாகத் தெரிவது என்னவென்றால்.17 ஆண்டுகள் ஆன பின்னரும் இரண்டு சமூகங்களுக்கும் இடையிலான கூட்டுக் காயங்கள் குணமாக்கப்படவில்லை என்பதைத 'தான். நீதிக்காகப் போராடும் தமிழ்மக்கள் இந்த விடயத்தில் இரண்டு சமூகங்களுக்கும் இடையிலான உறவைக் கவனத்தில் எடுத்துத் தான் ஒரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்.

ஒரு பண்பாட்டு ஆடை விவகாரத்தை முன்வைத்து பழைய காயங்களைப் புதுப்பிக்கக் கூடாது. தமிழ்மக்கள் கேட்டுப் போராடும் நீதி.தமிழ் மக்களுக்கு மட்டுமான நீதியல்ல. அது தேசிய இன விடுதலைக்கான நீதி. எனவே அங்கே தமிழ்ப் பகுதிகளில் வசிக்கும் ஏனைய மக்கள் கூட்டங்களும் தங்களுக்கும் நீதி கிடைக்கும் என்று நம்ப வேண்டும். சிங்களபௌத்த அரசுக் கட்டமைப்பு தங்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்று கேட்கும் தமிழ்மக்கள் தங்களுக்குள் வாழும் சிறிய தேசிய இனங்களுக்குத் தாங்களும் பொறுப்புக்கூற வேண்டும்.

# அருட்தந்தை ஜிம்பிரவுணுக்கு நீதி கிடைக்காத நாட்டில் ஈஸ்டர் குண்டுவெடிப்புக்கு நீதி?

ஈஸ்டர் குண்டுவெடிப்பைத் தடுக்கத் தவறியதற்காக நாட்டின் முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஒருவருக்கும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒருவருக்கும் நீதிமன்றம் மரண தண்டனை வழங்கிச் சரியாக 20 நாட்களில் அருட்தந்தை ஜிம் பிரவுணின் 20ஆவது நினைவுநாள் வந்தது.

கத்தோலிக்கத் திருச்சபையின் மத குரு ஆகிய அருட்தந்தை ஜிம் பிரவுண் 20 ஆண்டுகளுக்கு முன் அல்லைப்பிட்டியில் காணாமல் ஆக்கப்பட்டார். அவர் காணாமல் ஆக்கப்பட்ட நாளை கடந்த செவ்வாய்க்கிழமை அல்லைப்பிட்டியில் மக்கள் நினைவு கூர்ந்தார்கள். திருச்சபையின் மதகுருக்களும்,பங்கு மக்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் இணைந்து ஓர் அமைதிப் பேரணியை நடத்தினார்கள்.

ஜிம் பிரவுண் காணாமல் ஆக்கப்பட்டு 20ஆண்டுகள் கழிந்து விட்டன. புனித சம்பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபராகிய அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் காணாமல் ஆக்கப்பட்டு, அதுவும் சரணடைந்த பின் காணாமல் ஆக்கப்பட்டு 17 ஆண்டுகள் கழிந்து விட்டன. இரண்டு மத குருக்களுக்கும் இன்றுவரை நீதி கிடைக்கவில்லை.

ஆனால் 7ஆண்டுகளுக்கு முன் வெடித்த ஈஸ்டர் குண்டுகள் தொடர்பாக அரசாங்கம் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளது. இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டது போல ஒரு முன்னாள் போலீஸ் மா அதிபருக்கும் ஒரு முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் மரண தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. நாட்டின் முன்னாள் புலனாய்வுத் துறை பணிப்பாளர் விசாரணையின் கீழ் இருக்கிறார்.

அதாவது 7ஆண்டுகளுக்கு முன் நடந்த ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் அரசாங்கம் குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகளைத் தேடி விசாரணைகளை முடுக்கி விட்டிருக்கிறது. ஆனால் அதற்கு முன் அதாவது 17 ஆண்டுகளுக்கு முன்னும் 20 ஆண்டுகளுக்கு முன்னும் காணாமல் ஆக்கப்பட்ட இரண்டு கத்தோலிக்க மத குருக்களும் உட்பட ஏனைய மத குருக்களுக்கு இன்றுவரை நீதி இல்லை.

2009 மே மாதமும் அதற்கு முன்னரும் நடந்தது தமிழ் இன அழிப்பு என்று கத்தோலிக்கத் திருச்சபையின் அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் கடந்த மே மாதம் தெரிவித்தார். அது தவறு என்றும் அது அருட்தந்தை ஜீவந்த பீரிசின் தனிப்பட்ட கருத்து என்றும் கொழும்பில் உள்ள பேராயரின் இல்லம் மறுத்தது. 2009 வரையிலும் தமிழ்மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போரானது பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று பேராயர் இல்லத்தின் ஊடகத்துறை சார்ந்த ஒரு அருட்தந்தை தெரிவித்திருந்தார். ஆயின் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் தான் அருட்தந்தை ஜிம் பிறவுணும் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப்பும் காணாமல் ஆக்கப்பட்டார்களா?

ஆனால் கத்தோலிக்க திருச்சபையின் யாழ் மறை மாவட்டத்தை சேர்ந்த குருவானவர்கள் அருட்தந்தையர்களான ஜிம் பிரவுண், பிரான்சிஸ் ஜோசப் உட்பட எல்லா காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குமாக குரல் எழுப்புகிறார்கள்.க டந்த மாத இறுதியில் செம்மணியில், யாழ்.மறை மாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்க தந்தையர்களும் அருட் சகோதரிகளும் ஓர் அமைதிப் பேரணியை நடத்தினார்கள்.அங்கேயும் அவர்கள் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை வேண்டாம்,அ னைத்துலக விசாரணைப் பொறிமுறை தான் வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகக் கேட்டார்கள்.

அண்மை வாரங்களாக கத்தோலிக்கத் திருச்சபையின் தமிழ் மறை மாவட்ட மதகுருக்கள் ஒப்பீட்டளவில் தீவிரமாக இன அழிப்புக்கு நீதி கேட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கேட்டு,மனிதப் புதை குழிகளுக்கு நீதி கேட்டு அமைதியான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.யாழ் மறை மாவட்டத்திற்கு ஒரு புதிய ஆயர் நியமிக்கப்பட்டிருக்கும் பின்னணியில், அந்த ஆயர் தமிழ் பகுதிகளில் ஏற்கனவே இடம் பெற்ற நீதிக்கான போராட்டங்களில் ஈடுபடாதவர் என்பதனால் கொழும்பில் உள்ள பேராயரின் அரசியலை அவர் பின்தொடரக் கூடும் என்ற ஊகத்தின் அடிப்படையில், அவருடைய நியமனம் தொடர்பான




விமர்சனங்கள் அதிகரித்த அளவில் சமூகஊடக வலைத் தலங்களில் பகிரப்பட்ட ஒரு பின்னணியில்,யாழ் கத்தோலிக்க மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தையரும் அருட் சகோதரிகளும் அதிகமாக நீதிக்கான போராட்டங்களில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

அவ்வாறு அமைதிப் பேரணிகளில் ஈடுபடும் கத்தோலிக்க மத குருக்களும் அருட் சகோதரிகளும் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை நிராகரிப்பதோடு, சர்வதேச விசாரணைப் பொறிமுறையைக் கேட்கிறார்கள் என்பது இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது. ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் என்று கேட்கும் பேராயர் மல்கம் ரஞ்சித், தமிழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மத குருக்களின் அருட் சகோதரிகளின் மேற்படி கோரிக்கையை ஏற்றுக் கொள்வாரா? இம் மாதம் 15ஆம் திகதியிலிருந்து 17 ஆம் தேதி வரையிலும்,செம்மணியில் இடம்பெற்ற நீதியின் ஓலம்-2 என்ற போராட்டத்தின் போதும் அனைத்துலக விசாரணைதான் வேண்டும் என்ற கோரிக்கைதான் முன் வைக்கப்பட்டது. தாயகச் செயலணிஎன்ற அமைப்பு அந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைத்திருந்தது. கடந்த ஆண்டும் இதே அமைப்பு நீதியின் ஓலம்-1 என்ற போராட்டத்தை ஒழுங்குபடுத்தியது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் மத குருக்கள் அரசியல்வாதிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள் அதிகமாகக் காணப்பட்டார்கள். குறிப்பாக தென்னிலங்கையில் இடம் பெற்ற அரகலய போராட்டங்களில் முக்கியஸ்தராக இருந்தவரும் இங்கு இக்கட்டுரையில் முன்னர் குறிப்பிடப்பட்டவருமாகிய அருட்தந்தை ஜீவந்த பீரிசும் அந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் காணப்பட்டார். காவி உடை தரித்த ஒருவர் அந்தப் போராட்டத்தில் பிரச்சினையை ஏற்படுத்த முற்பட்டார். எனினும் போராட்டம் தொடர்ந்தது.

செம்மணியில் மூன்றாம் கட்ட அகழ்வாராட்சியில் இதுவரையிலும் 582 எலும்புக்கூடுகள் வெளிவந்து விட்டன. அண்மையில் அந்தப் பகுதியில் எழுமாறாக ஓரிடத்தைத் தெரிவுசெய்து அங்கே கிண்டிய பொழுது அங்கேயும் எலும்புக்கூடுகள் வெளிவந்தன. இது 28ஆண்டுகளுக்கு முன்பு கிரிசாந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட சோமரத்ன ராஜபக்ஷ கடந்த சுமார் 28ஆண்டு காலமாகத் தொடர்ச்சியாகக் கூறி வருவதை ஞாபகப்படுத்துகிறது.

சோமரத்ன ராஜபக்ச கூறுகிறார், செம்மணியும் உட்பட அந்தப் பிரதேசத்தில் வேறு பல இடங்களில் புதை குழிகள் உண்டு என்று. ஆனால் அவர் 28 ஆண்டுகளுக்கு முன் கூறிய தொகையை விட அதிக தொகை எலும்புக்கூடுகள் இப்பொழுது வெளிப்பட்டிருக்கின்றன. மேலும் அவருடைய வாக்கு மூலத்தின் படி அவருக்கு உத்தரவிட்ட சில மேலதிகாரிகளையும் அவர் குற்றம் சாட்டியிருந்தார். அந்த அதிகாரிகளில் எவரும் இதுவரை விசாரிக்கப்படவில்லை. கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலான காலப்பகுதியில் அவர்களில் சிலர் பதவி உயர்வுகளைப் பெற்று விட்டார்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்று விட்டார்கள்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின் சோமரத்ன ராஜபக்சவின் வாக்குமூலத்தை அவருடைய மனைவி புதுப்பித்தார். தன் கணவருக்கு நீதி வேண்டும் என்றும்,அதற்கு அனைத்துலக விசாரணை வேண்டும் என்றும் அவர் குரல் எழுப்பியுள்ளார். ஆனால் அரசாங்கம் அவருடைய வேண்டுகோளுக்கு இதுவரையிலும் செவி சாய்க்கவில்லை.

செம்மணிப் புதை குழி தொடர்பான நடவடிக்கைகளில் "அகழ்வாராய்ச்சி என்பது குற்றவியல் விசாரணை அல்ல'' என்று அண்மையில் கூறியுள்ளார் ஜோஹன் சூ.ஃபி.இவர் யார் என்றால்,கடந்த சில ஆண்டுகளாக ஐநாவில் இயங்கி வருகின்ற சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகத்தின் பொறுப்பதிகாரியாகும். இலங்கை பொறுப்புக் கூறல் திட்டம்''-Sri Lanka Accountability Project-(OSLAP) என்று அழைக்கப்படுகின்ற இந்த அலுவலகம் 2022ஆம் ஆண்டிலிருந்து ஐநா.மனித உரிமைகள் ஆணையாளருடைய அலுவலகத்தில் இயங்கி வருகிறது.

தற்போது நடை பெற்று வரும் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிக்கும் குற்றவியல் விசாரணைக்கும் இடையே தெளிவான வேறுபாடு உண்டு என்று சூ.ஃபி கூறுகிறார். இவ்விரண்டையும் ஒன்றாகக் குழப்பிக் கொள்ளக்கூடாது என்றும் கூறுகிறார். அகழ்வாராய்ச்சி என்பது நிலத்திலிருந்து உடல்களை மீட்டெடுத்து, அவை கண்ணியமான முறையில் கையாளப்படுவதை உறுதி செய்வதாகும். ஆனால், குற்றவியல் விசாரணை என்பது என்ன நடந்தது, யார் பொறுப்பு,மற்றும் குற்றங்கள் எப்போது இழைக்கப்பட்டன என்பதைத் தீர்மானிப்பதாகும். என்றும் ஜோஹன் சூ.ஃபி கூறியுள்ளார்.அவர் கூறுவது போல குற்ற விசாரணைகளை அரசாங்கம் எப்பொழுது தொடங்கும்?

குற்ற விசாரணைகள் எலும்புக்கூடுகளின் காலத்தைக் கண்டு பிடிப்பதில் இருந்து தொடங்கும். அரசாங்கம் அவ்வாறு எலும்புக்கூடுகளின் காலங்களைக் கண்டு பிடிப்பதற்குத் தேவையான தடையவியல் ஆய்வு மையங்களை நாட்டில் உருவாக்கவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவற்றில் ஒன்று யாழ்.மருத்துவ பீடத்தில் அமையும் என்றும் அறிய முடிகிறது.

எலும்புக்கூடுகளின் காலத்தைக் கணித்தால் தான் அக்காலகட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டதாகச் சந்தேகப் படுகின்றவர்களின் உறவினர்களுடைய மரபணு மாதிரிகளையும் எலும்புக் கூடுகளின் மரபணு மாதிரிகளையும் (23ம் பக்கம் பார்க்க)

# கட்டுக்கதைகளுக்கு அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது!

நாட்டில் மீண்டும் புலிகளின் மீள் உருவாக்கம் தொடர்பிலான புனைக் கதைகளைக் கூறி பதற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு சில குழுக்கள் முயற்சிக்கின்றனவா என்ற சந்தேகம் தற்போது ஏற்பட்டிருக்கின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் புதிதாக முளைத்துள்ள அமைப்பொன்றின் பிரதிநிதி தெரிவித்த கருத்தும் அதற்கு அரசாங்கத் தரப்பில் வழங்கப்பட்டுள்ள பதிலும் பல்வேறு சந்தேகங்களை உருவாக்கும் வகையில் அமைந்துள்ளன.

கண்டங்களுக்கிடையேயான மனித உரிமைகள் ஆணையகத்தின் (அரச சாரா அமைப்பு) நிறைவேற்றுப் பணிப்பாளர் என்ற பெயரில் சங்கீத் டயஸ் சேகர என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியிருந்தார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட பளை பகுதியில் அமைந்துள்ள அரச காப்பக நிலத்தில் எவ்வித அனுமதியுமின்றி சட்டவிரோத கட்டுமானங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இது தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சிக் முகாமொன்றை அல்லது வெடிபொருட்களை உற்பத்தி செய்யும் கூடத்தை உருவாக்கும் திட்டமா என்ற பலத்த சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கோரி நாட்டின் உயர்மட்டஅதிகாரிகளுக்கு எழுத்து மூல ஆவணங்கள் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட பளை பகுதியில் அமைந்துள்ள அரச காப்பகத்துக்குச் சொந்தமான சுமார் 49 ஏக்கர் நிலப்பரப்பு சட்டவிரோதமான முறையில் துப்புரவு செய்யப்பட்டு, மத்திய அரசோ அல்லது உள்ளூராட்சி அமைப்புகளோ அறியாமல் எவ்வித அனுமதிப் பத்திரங்களுமின்றி மூன்று மாடி கொங்கிரீட் கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இங்கு தினமும் 100 முதல் 150 வரையிலான நபர்கள் பணிக்கு வருகை தருகின்றனர்.

இந்தத் திட்டத்தின் பின்னணியில் அரச உயர் மட்டத்தைச் சேர்ந்த சிலர் உள்ளதாகவும், இது ஒரு வெளிநாட்டு உதவித் திட்டமாக ஒருங்கிணைக்கப்படுவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. எவ்வித சூழலியல் அல்லது பிரதேச சபையின் கட்டிட அனுமதியுமின்றி இவ்வளவு பெரிய கட்டுமானங்கள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன என்பது தீவிர சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த விவகாரம் குறித்து பாதுகாப்பு அமைச்சு உடனடியாக விரிவான விசாரணைகளை நடத்த வேண்டும்' எனவும் அவர் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

இந்த அநாமதேய அமைப்பின் குற்றச்சாட்டு தொடர்பில் அரசாங்கத் தரப்பில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர கருத்து தெரிவித்திருந்தார். இந்த விடயம் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

குறித்த விடயம் சம்பந்தமாக கருத்து தெரிவித்த பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர, 'பளை பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிர்மாணம் தொடர்பில் எமக்கு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதனையடுத்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து அது தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த விடயம் தொடர்பில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதிகாரிகள் நேரடியாக சென்று அந்த நிர்மானம் தொடர்பிலான மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளவுள்ளனர்' என்று குறிப்பிட்டிருக்கின்றார்.




கிளிநொச்சி மாவட்டம், பச்சிளைப் பள்ளி பிரதேசத்துக்குட்பட்ட பளை பகுதியில் புதிதாக கட்டுமானம் கட்டப்படுகின்றமை தொடர்பில், 'கண்டங்களுக்கிடையேயான மனித உரிமைகள் ஆணையம்' என்ற அமைப்பின் சார்பில் குற்றம்சாட்டப்பட்டவுடன் அது குறித்து விசாரணை இடம் பெறுவதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளமையை சிறுபிள்ளைத்தனமான செயற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளது.

பளைப் பகுதியில் 49 ஏக்கர் நிலப்பரப்பில் அனுமதி பெறப்படாது மூன்று மாடி கட்டடம் நிர்மாணிக்கப்படுவதாகவும் இங்கு தினமும் 100 முதல் 150 வரையிலான நபர்கள் பணிக்கு வருவதாகவும் இந்த அமைப்பு குற்றம்சாட்டியுள்ளதுடன் அதனை புலிகளின் பயிற்சி முகாமா அல்லது வெடிப் பொருட்களை உற்பத்தி செய்யும் கூடமா என்று கேள்வி எழுப்பியுள்ளமை திட்டமிட்ட வகையில் நாட்டில் பதற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது.

2009ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றிருக்கவில்லை.

தற்போது தெற்கில் பல்வேறு படுகொலை சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. பாதாள உலகக் குழுக்களுக்கிடையிலான மோதல் என்று கூறி இதனை நியாயப்படுத்தி வரும் அரசாங்கமானது பளையில் கட்டடம் ஒன்று கட்டப்படுகின்றது, அதில் விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கம் இடம்பெறுகின்றதோ என்று ஓர் அமைப்பு குற்றம் சாட்டியதுடன் அது குறித்து விசாரிப்பதாக கூறுவது வேடிக்கையான விடயமாகவுள்ளவே உள்ளது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் இத்தகைய புலிகளின் மீளுருவாக்கம் என்ற கட்டுக்கதைகள் பரப்பப்பட்டு வந்தன. தேர்தல் காலங்களில் தெற்கின் அரசியல் கட்சிகள் தமது சுயநல அரசியலுக்காக இத்தகைய புலி மீளுருவாக்க கதைகளை கூறி வந்திருந்தன.

மீண்டும் புலிகள் உருவாகின்றார்கள், புலம்பெயர்ந்த மக்கள் இதற்கு உதவுகின்றார்கள், இதனால் நாட்டில் பாதுகாப்பை கருத்தில்கொண்டு சிங்கள மக்கள் எம்மை ஆதரிக்க வேண்டும் என்று பல இனவாத கட்சிகள் தேர்தல் காலங்களில் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தன.

தற்போது தேர்தல் காலமாக இல்லாத போதிலும் மீண்டும் நாட்டில் பதற்றத்தை ஏற்படுத்தி இனங்களுக்கிடையே இனவாதத்தை உருவாக்கும் வகையில் சில சக்திகள் செயற்படுகின்றனவா என்ற சந்தேகத்தை தற்போதைய 'புலிகளின் மீள் உருவாக்கக் கதை' ஏற்படுத்துகின்றது.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழ் இளைஞர், யுவதிகளின் உணர்வுகளை மழுங்கடிக்கும் வகையிலான செயற்பாடுகளை திட்டமிட்டு மேற்கொண்டு வந்திருந்தன. அதில் ஓரங்கமாகவே வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் போதைவஸ்து கலாசாரம் பரப்பப்பட்டிருந்தது.

தற்போது கூட அத்தகைய செயற்பாடு அங்கு இடம்பெற்றே வருகின்றது. நாட்டில் இடம் பெற்ற கொடூர யுத்தத்தினால் தமிழ் மக்கள் பேரழிவுகளை சந்தித்திருந்தனர். இறுதி யுத்தத்தின் போது தமிழ் மக்கள் பல்லாயிரக்கணக்கில் கொன்று குவிக்கப்பட்டிருந்தனர். பெரும் யுத்தக் குற்றங்கள் அரங்கேற்றப்பட்டிருந்தன.

இவ்வாறு பேரிழப்புகளை சந்தித்த தமிழ் மக்கள் தற்போது அந்த அனர்த்தங்களின் வடுக்களிலிருந்து மீண்டு வரும் நிலையில் மீண்டும் பதற்றத்தை உருவாக்குவதற்கு செயற்படும் சக்திகளுக்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்று உறுதி வழங்கியிருந்தது. ஆனால்ஆட்சிக்கு வந்து 2 வருடங்களாகின்ற போதிலும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு பேராதரவை வழங்கியிருந்தனர். கடந்த கால அரசாங்கங்களை விடவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உருவானால் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்று தமிழ் மக்கள் நம்பியிருந்தனர். அதனால் தான் தேசிய மக்கள் சக்தியை அந்த மக்கள் ஆதரித்திருந்தனர்.

ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இன்னமும் அரசாங்கம் தீர்வு காண முயலவில்லை. வெறும் சாக்குப் போக்குகளைக் கூறி காலத்தைக் கடத்தும் செயற்பாடே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த சூழ்நிலையில் மீண்டும் வடக்கு, கிழக்கில் புலிகள் மீள் உருவாக்கம் பெறுவதாகவும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டி தெற்கில் பதற்றத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது.

இத்தகைய முயற்சிகள் இனங்களுக்கிடையே முரண்பாடுகளை உருவாக்கி மீண்டும் குரோத நிலையை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும். எனவே, தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது இத்தகைய பதற்றத்தை உருவாக்கும் அமைப்புகளின் செயற்பாடுகளுக்கு ஒரு போதும் அனுமதி வழங்கக் கூடாது. இத்தகைய அமைப்புகளின் கட்டுக்கதைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகின்றோம்.

## பயங்கரவாதத் தடைச்சட்டம் இவ்வாண்டுக்குள்

(5ம் பக்கத் தொடர்ச்சி) நிலைமை காணப்படுகிறது. தேசிய பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பை கருத்திற் கொண்டு புதிய சட்டம் ஒன்றை இயற்றுவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.


இதற்கமைய 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்தில் காணப்படுகின்ற குறைப் பாடுகளை நிவர்த்தி செய்து புதிய சட்டத்தை அறிமுகப் படுத்தவேண்டிய தேவையின் அடிப்படையில், குறித்த விடயங்களுக்கு உரிய அடிப்படை எண்ணக்கருவை தயாரிப்பதற்காக விசேட நிபுணத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த தொழில்நுட்ப விசேட நிபுணத்துவக் குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள முதனிலை சட்ட வரைவை அடிப்படையாகக் கொண்டு 'பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாத்தல்' எனும் சட்டத்தை உருவாக்க அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

அதற்கமைய சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்ட மா அதிபர் அனுமதி அளித்துள்ளார். இந்த சட்டமூலம் வெகுவிரைவில் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படும். அதனைத் தொடர்ந்து முதலாம் வாசிப்புக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.


பயங்கரவாத தடைச்சட்டம் மனித உரிமைகளுக்கு எதிரானது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். இந்த சட்டம் இந்த ஆண்டுக்குள் முழுமையாக இரத்துச் செய்யப்படும். தேசிய பாதுகாப்பையும், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை பாதுகாக்கும் வகையில் புதிய சட்டம் இயற்றப்படும்.

புதிய சட்ட உருவாக்கத்துக்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்ய வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தும் தரப்பினர் நடைமுறை நெருக்கடிகள் மற்றும் பூகோள பயங்கரவாதம் உள்ளிட்ட பொதுவான காரணிகளை முன்னிலைப்படுத்தி ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று வலியுறுத்துகிறேன் என்றார்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! அனுகூலமாக அனைத்து காரியங்களும் நடக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்சனைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற் கொள்வீர்கள். தொழில் வியாபாரம் சீராக நடக்கும்.





ரிஷபராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரசசனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணத்தின் போது கவனம் தேவை. குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி அளிக்கும். வழக்குகளில் மெத்தனம் காணப்படும்.





மிதுனராசி அன்பர்களே! தேவையற்ற மனக்கவலை அகலும். வழக்கு விவகாரங்களில் இருந்த தாமதமான போக்கு நீங்கும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை.





கடகராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு வரலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர்.




சிம்மராசி அன்பர்களே! சிக்கல்கள் தீரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவர். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும். வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும்.




கன்னிராசி அன்பர்களே! மன சஞ்சலம் நீங்கும். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். குடும்பத்தினரின் செயல்பாடுகள் மகிழ்ச்சியை கொடுக்கும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளை அனுசரித்து செல்வதும், அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும்.





துலாம்ராசி அன்பர்களே! எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பூமி, வீடு தொடர்பான பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மன வருத்தம். நீங்கும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். குடும்பத்தினரின் பேச்சுக்கு எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளிடம் அன்பாக பழகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும்





விருச்சிகராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் கல்வி பற்றிய கவலை நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பரபரப்பு நீங்கி பணிகளை கவனிப்பர்.








தனுசுராசி அன்பர்களே! திட்டமிட்டு எதையும் செய்ய வேண்டியது அவசியம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம், பிள்ளைகளின் செயல்களால் மனவருத்தம் போன்றவை ஏற்படலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல்கள் ஏற்படும்.




மகரராசி அன்பர்களே1 சாமர்த்தியம் அதிகரிக்கும். மனவருத்தம்நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தனாதிபதி சூரியன் சஞ்சாரத்தால் பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும், குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.




கும்பராசி அன்பர்களே! வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம்.




மீனராசி அன்பர்களே! சாதகமான பலன்கள் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும். திருமணம் தொடர்பான பேச்சு நடக்கும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# தமிழ் அரசியலில் தலைமைத்துவ

(19ம் பக்கத் தொடர்ச்சி) சர்வதேச அரங்கில் விட்டுக் கொடுக்காமல் பேசுவதற்கான ராஜதந்திரம் மிக முக்கியம். போரினால் ஏற்பட்ட உளவியல் ரீதியான வடுக்கள், இழப்புகள், மற்றும் ஏமாற்றங்களில் இருந்து மக்களை மீட்டெடுக்கும் 'ஆற்றுப்படுத்தும்' பண்பு தலைமைக்கு இருக்க வேண்டும். வெறும் அரசியல் உரிமைகளைப் பேசுவதோடு நின்றுவிடாமல், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அன்றாட வாழ்வாதாரம், கல்வி, பொருளாதார மேம்பாடு ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்துச் செயல்பட வேண்டும். கடந்த காலத்தில் ஒரு தனிநபரைச் சுற்றி நகர்ந்த அரசியல் நிலையை மாற்றி, பல்துறை வல்லுநர்கள், அறிவுஜீவிகள், இளைஞர்கள் மற்றும் பெண்கள் உள்ளடங்கிய ஒரு கூட்டுத் தலைமைத்துவக் கட்டமைப்பை (Collective Leadership Structure) உருவாக்க வேண்டும். மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளித்து, சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களையும் உள்வாங்கிச் செல்லும் சகிப்புத்தன்மை அவசியம். தற்காலிக அரசியல் இலாபங்களுக்காகவோ அல்லது தேர்தல் வெற்றிகளுக்காகவோ அன்றி, அடுத்த தலைமுறைக்கான நீண்டகால சமூக, பொருளாதார, கலாசாரப் பாதுகாப்பை உறுதி செய்யும் தொலைநோக்குப் பார்வை இருக்க வேண்டும். உலகெங்கும் பரந்து வாழும் புலம்பெயர் தமிழர்களின் பலத்தையும், தாயக மக்களின் தேவையையும் இணைக்கும் ஒரு பலமான பாலமாக இத்தலைமை செயல்பட வேண்டும். இது உச்சமான அர்ப்பணிப்பைக் கோரும் களம்.

தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் தங்களுடைய தனிப்பட்ட, பொருளாதார அல்லது அதிகார இலாபங்களைத் துறந்து, சமூகத்தின் நலனை மட்டுமே முன்னிறுத்தும் உயர் நாணயமும் நேர்மையும் (Integrity) கொண்டவர்களாக இருக்க வேண்டும். குறிப்பாகத் தேசியத் தலைவர் அல்லது தேசியத் தலைமைத்தும் அதிகாரத்தை தனிப்பட்ட நலனுக்காகப் பயன்படுத்தாதவராக இருக்க வேண்டும். வெளிப்படைத்தன்மை, நிதி ஒழுக்கம், பொது வாழ்க்கையில் எளிமை, வாக்குறுதிகளுக்கும் செயற்பாடுகளுக்கும் இடையிலான ஒற்றுமை ஆகியவை தலைமைத்துவத்தின் அடிப்படை நெறிமுறைகளாக இருக்க வேண்டும்.மக்களிடம் ஒழுக்கத்தை எதிர்பார்க்கும் தலைவர், முதலில் தனது அரசியல் நடத்தையிலேயே அதற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். (தொடரும்)

# அம்மாக்களுக்குக் கிடைக்காத நீதி

(12ம் பக்கத் தொடர்ச்சி) 17ஆண்டுகளாக அதைப் பொருத்தமான விதங்களில் செய்திருக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அம்மாக்களுடைய கண்ணீரும் கதறலும் எல்லா போராட்டக் களங்களுக்கும் தேவை. ஆனால் அந்த அம்மாக்களின் செலவுகளை பராமரிப்பதற்கு ஒரு மையமான அமைப்பு தாயகத்தில் எந்த ஒரு கட்சியிடமும் இல்லை. அல்லது கட்சி கடந்த அமைப்பும் இல்லை.

எதற்காகப் போராடுகிறோம் என்று கூறுகிறார்களோ அதற்காக ஒரு கட்டமைப்பும் இல்லை. அதற்கென்று பொதுவான நிதியும் இல்லை. அதற்கென்று வழி வரைபடமும் இல்லை. இவ்வாறு ஒரு மையத்தில் இருந்து முடிவெடுக்கப்பட வேண்டிய விடயங்களை அவ்வாறு முடிவெடுக்காமல் சிதறலாக தெட்டந்தெட்டமாகப் போராடிக்கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில்,தன்னைத்தானே தாழ்த்திக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில், கடந்த சில மாதங்களாக மாகாண சபைத் தேர்தலை நோக்கி வாதப் பிரதிவாதங்கள் கருத்துக்கணிப்புகள் தீர்க்கதரிசனங்கள் அதிகரித்து வருகின்றன.

மாகாண சபைத் தேர்தல்கள் நடக்குமோ நடக்காதோ தெரியாது. அவை எப்பொழுது நடத்தப்படும் என்பதும் தெரியாது.ஆனால் யாரை முதலமைச்சர் வேட்பாளராக முன் நிறுத்தலாம்? யார் வெல்லக்கூடும்? போன்ற வாதப் பிரதிவாதங்கள் அதிகரித்த அளவில் நடந்து வருகின்றன.அவைகூட வடக்கு மைய விவாதங்கள் தான். கிழக்கு மாகாண சபை பற்றியவையல்ல.

தன்னுடைய பிரதான அரசியல் கோரிக்கையை முன்வைத்து ஒரு பெருந்திரளாக போராடுவதற்கு வேண்டிய பலத்தைத் திரட்டிக் கொள்ளாத ஒரு சமூகம், மாகாண சபைகளைக் கையில் கொடுத்தால் என்ன செய்யும்? எதை வெட்டிப் பிடுங்கும்? மறைந்த முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை கூறியது போல நந்தவனத்து ஆண்டி,நாலாறு மாதமாய் குயவனை வேண்டி, கொண்டு வந்த தோண்டியை கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைக்கப் போகிறதா?

# போரில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும் ஈழப்போரின் முடிவு முழுமையான அமைதியைத் தரவில்லை

(3ம் பக்கத் தொடர்ச்சி) புலிகளைச் சமமான பங்காளியாகப் பார்த்தார். ஜனாதிபதியும் பிரதமரும் அதிகாரப் பரவலாக்கலில் ஒத்த கருத்து கொண்டிருந்த போதிலும், கட்சி அரசியலால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் (SLMM) பலவீனம் புலிகளுக்குச் சாதகமானது.

நோர்வே நாட்டின் அணுகுமுறை விடுதலைப் புலிகளை ஒரு இறையாண்மையுள்ள அரசுக்குச் சமமாக நடத்துவதாக அமைந்திருந்ததாக பீரிஸ் சாடியுள்ளார்.

2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் திகதி இரட்டை கோபுர தாக்குதலுக்குப் பிறகு சர்வதேச கெடுபிடிகள் அதிகரித்த போதிலும் அமைதிச் செயல்முறையைப் பயன்படுத்தி புலிகள் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றனர்.

அதேசமயம், கிழக்கில் பெரும்பான்மையாக வாழும் முஸ்லிம் மக்களின் கோரிக்கைகளும், சிறுவர்கள் இராணுவத்தில் சேர்க்கப்பட்ட மனித உரிமை மீறல்களும் புறக்கணிக்கப்பட்டன.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு முக்கியமாக இருந்த போதிலும், ராஜீவ்காந்தியின் படுகொலைக்குப் பிறகு டெல்லியின் அணுகுமுறை கடுமையானது.

2003 ஆம் ஆண்டில் புலிகள் முன் வைத்த 'இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை' பீரிஸும் சந்திரிகாவும் நிராகரித்ததால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டில் சுனாமிக்குப் பிறகு மீண்டும் தொடங்க முயன்ற பேச்சுவார்த்தை உச்சநீதிமன்றத் தலையீட்டால் முடிவுக்கு வந்தது.

2009 ஆம் ஆண்டில், போரில் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும், போருக்கான அடிப்படை அரசியல் காரணங்களுக்கும் இனப் பிரச்சினைக்கும் இன்றும் முற்றுப் புள்ளி வைக்கப்படவில்லை என்ற ஜி.எல். பீரிஸின் வாக்குமூலத்தோடு கிருஷ்ணன் சீனிவாசன் தனது நூல் ஆய்வை நிறைவு செய்துள்ளார்.

# தமிழ் அரசியலில் தலைமைத்துவ வெற்றிடம்!

## விவாதத்திற்கான சில குறிப்புக்கள் - 04

கட்டுரையாளர்:
- கருணாகரன் -

(சென்றவாரத் தொடர்ச்சி)

அரசியலில் நம்பிக்கை என்பது மிகப் பெரிய அரசியல் மூலதனமாகும். அந்த நம்பிக்கை ஒருமுறை சிதைந்து விட்டால், அதை மீண்டும் உருவாக்குவது மிகவும் கடினம். விடுதலைப் புலிகளின் மீது பலருக்குக் கடுமையான விமர்சனங்கள் இருக்கலாம். ஏன், புலிகளை யாரும் எதிர்த்து, மறுக்கலாம். உலகமே புலிகளுடைய அரசியல், இராணுவ நிலைப்பாடுகளையும் செயற்பாடுகளையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது கூட உண்மையானது தான்.


ஆனால், புலிகளின் மீதான மதிப்பும் அவர்களுடைய அரசியல் இராணுவச் செயற்பாடுகளின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை இன்னும் பெரிதாக மாறவில்லை. புலிகள் தோற்கடிக்கப்பட்ட சக்தியாகி விட்டனர். புலிகள் இல்லாது 17 ஆண்டுகள் கடந்து விட்டன. அதற்குப் பிறகு ஒரு புதிய தலைமுறை உருவாகி விட்டது. ஆனாலும் இன்னும் புலிகளின் மீதான மதிப்பும் கவர்ச்சியும் சமூகத்தில் குறையவில்லை. என்பதால் தான் தமிழ்த்தேசியவாத அரசியல் இன்னமும் புலிகளின் நினைவுட்டல்களைச் சுற்றிக் கொண்டே நிகழ்கிறது. இன்னும் பிரபாரகரன் தான் தமிழ்த் தேசியவாத அரசியலின் தலைவரும் முதலீடுமாகும். ஈழத்தில் மட்டுமல்ல, இந்தியாவில் (தமிழகத்திலும்) இதுதான் விதி.

புலிகளை மீறி அல்லது அவர்களைக் கடந்து ஒரு புதிய அரசியலும் தலைமையும் ஏன் இன்னமும் உருவாகவில்லை? தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்த இராஜவரோதயம் சம்பந்தன், ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்றை ஏற்றுக்கொள்ளத் தயார் என்ற அறிவிப்போடு, இலங்கை அரசுடன் 'அடிப்படையில் விட்டுக் கொடுப்பற்ற, புரிந்துணர்வு அடிப்படையிலான பேச்சுவார்த்தை அரசியலை' மேற்கொள்வதற்கு முயற்சித்தார்.

இதற்குத் தமிழர்களிடத்தில் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியது. சிங்களவர்கள் இதைக் கண்டும் காணாதிருந்தனர். இதனால், சம்பந்தனும் தலைவராகப் பரிமளிக்கக் கூடிய இடத்தைப் பெற முடியாமல் போனது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகக் கருதப்பட்டாரே தவிர, தமிழ் மக்களின் தலைவராக மாற்றமடைய முடியவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால், தனிநாடு, தமிழீழம், சமஸ்டி எதுவும் இலங்கை அரசியலில் இப்போதைக்குச் சாத்தியமில்லை என்று தெரிந்து கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ்வே சம்பந்தனை எதிர்த்தது. சம்பந்தனை அதற்காக மட்டும் எதிர்க்கவில்லை, தமிழ்த்தேசிக் கூட்டமைப்பை அவர் ஜனநாயக அடிப்படையில் வழி நடத்துவதற்குப் பின்னின்றார். அதனால் ஏற்பட்ட நெருக்கடிகளினால் தான் தம்மால் சம்பந்தனை ஆதரிக்கவும் அவருடைய நிலைப்பாட்டுக்கு வலுச் சேர்க்கவும் முடியவில்லை என்று இப்பொழுது ஈ.பி.ஆர்.எல்.எவ் விளக்கமளிக்கலாம்.

ஆனால், அரசியல் ரீதியாக அது ஏற்புடையதல்ல. சம்மந்தன் முன்னெடுத்த அரசியலை அவரைத் தவிர, அந்தளவு Smart ஆக முன்னெடுப்பதற்கும் அதற்குரிய அடையாளத்தை உருவாக்குவதற்கும் வேறு யாருமில்லை. ஆகவே அந்தச் சந்தர்ப்பத்தை இழந்தது பேரிழிப்பே.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வைப் போல ரெலோவும் புளொட்டும் சம்பந்தனை விட்டு விலகாது கடைசி வரையில் தாக்குப் பிடித்து நின்றாலும் அவை இரண்டும் அவரைப் பலப்படுத்தவே இல்லை. சம்மந்தனும் அவருடைய நிழலான சுமந்திரனும் குறிவைத்துத் தீவிரத் தமிழ்த் தேசியத்தரப்பினரால் தாக்கமுற்பட்ட போது, ரெலோவும் புளொட்டும் வேடிக்கை பார்த்தன. அல்லது அமைதி காத்தன. விளைவு சம்பந்தன் முன்னெடுக்க முயற்சித்த அரசியலும் செலிழந்து விட்டது. சம்பந்தனுக்குப் பின்னராக தலைமைத்துவமும் இல்லாமற் போனது.




ஒரு தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளும் போது, அந்தத் தலைமைத்துவம் முன் வைக்கும் அரசியல் கோட்பாடும் நிலைப்பாட்டும் குறித்த சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அது பிற சமூகத்தினரையும் திரும்பிப் பார்க்க வைக்கிறது. அல்லது ஒரு கோட்பாட்டில் அல்லது நிலைப்பாட்டில் மக்கள் திரளும் போது அந்தக் கோட்பாட்டுக்கும் நிலைப்பாட்டுக்கும் நேர்மையான முறையில் அர்ப்பணிப்புடன் செயற்படும் அரசியல் தரப்பை வழிநடத்தும் தலைமைத்துவம், குறித்த சமூகத்தின் தலைமையாகக் கொள்ளப்படுகிறது அல்லது அதனுடைய தலைமையாக மாறி விடுகிறது. அது பிற சமூகத்தினரையும் கவனிக்க வைக்கிறது.

இன்றைய நிலையில் ஈழத்தமிழ்ச் சமூகத்தில் இந்த இரண்டு நிலைகளிலும் வறுமை அல்லது உறுதியற்ற நிலையே காணப்படுகிறது.

இப்பொழுதுள்ள தமிழ்த் தலைவர்கள் ஊசலாடுகின்றனர். மாகாணசபை முறைமையை நடைமுறைப்படுத்தக் கோருகின்ற தரப்புகள் அனைத்தும் சமஸ்டி, தமிழீழம் என்ற சொல்லைத் தவறாமல் மேடைகளில் உச்சரிக்கின்றன. அந்தச் சொற்களைக் கைவிட்டால், தமிழ் மக்கள் தங்களைக் கைவிட்டு விடுவார்கள் என்று இவர்கள் அச்சமடைகின்றனர்.

ஆனால், யதார்த்த நிலை என்னவென்று அனைவருக்குமே நன்றாகத் தெரியும். இந்த உண்மையை மக்களும் அறிவர். அதாவது குறித்த தலைமைகள் தங்களால் முடியாததையெல்லாம் சும்மா பேச்சுக்காகச் சொல்கிறார்கள். மற்றும்படி சமஸ்டியை நோக்கியோ, தனிநாட்டை நோக்கியோ (ஒரு நாடு இரு தேசம்) இவர்களால் ஒரு அடி கூட வைக்க முடியாது என்று. என்பதால் தான் இந்தத் தலைவர்களையும் இவர்களுடைய அரசியல் முன்னெடுப்புகளையும் மக்கள் பெரிதாகக் கொள்ளாத நிலை உருவாகி வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் இந்தக் கட்சிகளும் இவற்றின் தலைமைத்துவங்களும் கீழிறக்கம் கண்டுள்ளனவே தவிர, உயர்வைப் பெறவில்லை. இந்தச் சூழலில் தான் தேசிய மக்கள் சக்தி இலகுவாக வடக்குக் கிழக்கில் தன்னை மிக இலகுவாக நிறுத்தவும் வெற்றியீட்டவும் முடிந்தது.

இதைக் குறித்துப் பரிசீலிப்பதற்கு எந்தக் கட்சியும் தயாரில்லை. எந்தத் தலைமையும் தயாரில்லை. இந்த உண்மைகளை உணர்ந்தாலும் ஏற்றுக் கொள்ள முடியாமல் எல்லாத் தலைமையும் தத்தளிக்கிறது. ஆனால், நிச்சயமாக ஒரு மாற்றத்தை முன்னேற்றத்தை உருவாக்க முடியும். அரசியலில் எதுவும் சாத்தியம். அதற்கு நாம் தயாராக வேண்டும். அந்தத் தயார்ப்பாடு சாத்தியமில்லை என்றால், தேவையான பலதும் சாத்தியமற்றுப் போகும்.

இன்றைய தமிழ்த் தலைமைத்துவ வெற்றிடம் என்பது பல தயாரின்மைகளின் கூட்டு விளைவாகும்.

ஒரு இனத்தில் அல்லது ஒரு சமூகத்தின் தலைமைத்துவம் என்பது, எளியதல்ல. அதுவும் நீண்டகால ஒடுக்குமுறைக்குள்ளாகிய சமூகத்திற்கான தலைமைத்துவம் என்பது மிகுந்த ஆற்றலைக் கொண்டதாகும் உச்சமான அர்ப்பணிப்பைச் செய்யும் திறனுள்ளதாகவும் இருக்க வேண்டும். ஈழத் தமிழ்ச் சமூகம் என்பது தனியே நீடித்த ஒடுக்குமுறைக்குள்ளானது மட்டுமல்ல, நீண்ட போரினால் பாதிக்கப்பட்டதுமாகும். அத்துடன் போரிலே தோற்கடிக்கப்பட்டதுமாகும். இந்த நிலையில் அதற்குத் தலைமையேற்கும் சக்தி மிகுந்த ஆற்றலோடும் அர்ப்பணிப்போடும் செயற்படக் கூடியதாக இருக்க வேண்டும்.

இது எளிதானதல்ல. மிக மிகக் கடினமானதாகும். ஏனென்றால், கடந்த காலப் போராட்டங்கள் பெரும்பாலும் உணர்வுகளை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டவை. தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றவற்றின் அரசியற் சொல்லாடல்களும் தலைவர்களின் பிரகடனங்களும் வரலாற்றின் சிரிப்புக்குரியன. அறிவுபூர்வமாகாத எதுவும் நகைப்புக்குரியதாகவே இருக்கும். நடைமுறைச் சாத்தியமற்ற எவையும் கோமாளித்தனமானவையாகி விடும். பின்வந்த விடுதலைப்புலிகள் நடைமுறைகளைத் தமது செயற்பாட்டுத் தத்துவமாகக் கொண்டிருந்தாலும் அந்தப் போராட்டம் உணர்ச்சிமயமானது. அந்த உணர்ச்சி மயத்திலிருந்தே பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. இது கடுமையான விமர்சனம் தான். ஆனால். இது தான் உண்மை. இதனால் தான் அறிவார்ந்த தளத்தில் அதனால் வெற்றியடைய முடியாமல் போனது. சுருக்கமாகச் சொன்னால், சர்வதேச உலக ஒழுங்கின், பிராந்திய மாறுதல்களின் போக்கினை மதிப்பிடவும் கையாளவும் தவறியது அறிவார்ந்த அணுகுமுறைக்குப் பதிலாக உணர்ச்சிகரமான முடிவுகளால் தீர்மானிக்கப்பட்டதன் விளைவாகும்.

இது ஈழத்தமிழ்ச் சமூகத்துக்கு அருமையானதொரு படிப்பினையாகும். தற்போதைய தலைமைக்கு உணர்ச்சியை விட அறிவுப்பூர்வமான, சாணக்கியமான அணுகுமுறை அவசியம். தற்போதைய உலக அரசியல் மற்றும் பிராந்திய அரசியல் (குறிப்பாக இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளின் நகர்வுகள்) போக்குகளைத் துல்லியமாகக் கணித்து, தமிழர்களின் உரிமைகளை (18ம் பக்கம் பார்க்க)

# தமிழர் தலைவர் அமிர்தலிங்கம் 99வது பிறந்த தினம் (26 ஆகஸ்ட்)

தமிழில் வல்லபம் மிக்க பேச்சாளரான அமிர்தலிங்கம் கொழும்பு பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியராக விபுலானந்தர் கடமையாற்றிய போது அங்கு பயின்றவர். அன்றிலிருந்து மட்டக்களப்பு தமிழகத்துக்கும் அவருக்குமான தொடர்புகள் ஆரம்பித்தன எனலாம். அதன் பின்னர் பட்டதாரியாக வெளியேறிய அமிர்தலிங்கம் பல அரசியல் கட்டுரைகளை எழுதத்தொடங்கினார். மண்டூரில் இருந்து 1948-1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிவந்த பாரதி என்னும் இலக்கிய சஞ்சிகையில் கூட அவரது அரசியல் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

1949இல் சா.ஜே.வி.செல்வநாயகம் ஆரம்பித்த தமிழரசு கட்சியூடாக அவரது நேரடி அரசியல் பிரவேசம் நிகழ்ந்தது. அவரது நீண்ட அரசியல் பயணமானது பதவிகளால் மட்டும் அலங்கரிக்கப்பட்டதாயிருக்கவில்லை. சாத்வீக போராட்டங்கள், உண்ணாவிரதங்கள், சத்தியாகிரகங்கள், ஊர்வலங்கள், கறுப்பு கொடியேந்தல்கள், கைதுகள், சிறைவாழ்வுகள், அஞ்ஞாதவாசங்கள், துன்பங்கள், துயரங்கள் என்பவற்றால் நிரம்பியது.

1952ஆம் ஆண்டு முதன் முதலாக போட்டியிட்ட பாராளுமன்ற தேர்தலிலே அவர் தோல்வி காண நேர்ந்தது. அதன் பின்னர் 1956ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்த அவருக்கு தனது அரசியல் இருப்பை தொடர்ச்சியாக பேணுவதென்பது அத்தனை இலகுவானதாக இருக்கவில்லை. அதனை தொடர்ந்து வந்த 1960,1965 தேர்தல்களில் வெற்றிபெற்ற போதும் 1970ஆம் ஆண்டு தேர்தலில் அவர் தோல்வியடைய நேர்ந்தது. அந்த தேர்தலிலே அவர் சார்ந்த கட்சியும் பலத்த சரிவை சந்திக்க நேர்ந்தது.


1956ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சிங்கள மொழி சட்டத்தை எதிர்த்து தமிழரசு கட்சியினர் நடாத்திய சத்தியாகிரக போராட்டம் முக்கியமானது. காலிமுகத்திடலில் அந்த சத்தியாகிரகிகள் மீது சிங்கள காடையர்கள் மேற்கொண்ட தாக்குதல்களில் பலர் படுகாயமடைந்தனர். அந்த தாக்குதலில் இரத்தம்தோய்ந்த ஆடையுடன் பாராளுமன்றம் சென்றார் அமிர்தலிங்கம்.

1953ஆம் ஆண்டு இந்தியாவில் ஹிந்தி எதிர்ப்பு வலுப்பெற்ற போது டால்மியாபுரம் என்கின்ற பெயரை கல்லக்குடி என மாற்றக்கோரி நடைபெற்ற போராட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அங்கே ரயிலை மறித்து தண்டவாளத்தில் தலையை வைத்து படுத்தார் கருணாநிதி. அந்த தீரச் செயல் எப்படி அவருக்கு கல்லக்குடி காத்த வீரர் என்கின்ற மங்காப்புகழை பெற்றுத்தந்ததோ அதே போன்றே அமிர்தலிங்கம்

காலிமுகத்திடலில் பட நேர்ந்த இரத்த காயங்கள் அவருக்கு வலிமையான ஒரு அரசியல் அடையாளத்தை பெற்றுத்தந்தது.

1977ஆம் ஆண்டு தேர்தலை எதிர்கொள்ள நேர்ந்த போது செல்வநாயகம் மரணமடைந்தார். அவ்வேளையில் தனது சொந்த தொகுதியைவிடுத்து செல்வநாயகத்தினுடைய காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிட்டதனுடாக தனது தேர்தல் வெற்றியை காரியசித்தியாக்கினார்.. அத்தோடு கூடவே தானே கட்சியின் இரண்டாம் தலைமை என்பதையும் உறுதி செய்தார். இத்தகைய செயல் திறன்மிக்க திட்டமிட்ட நகர்வுகளே அவருக்கு என்றும் உறுதுணையாயின.

1970ஆம் ஆண்டு காலமானது தமிழரசு கட்சிக்கு மட்டுமன்றி தமிழ் தேசிய சக்திகளுக்கு பெரும் சவால் மிகுந்ததொன்றாகவிருந்தது. செல்வநாயகத்தின் அந்திம காலங்களில் தமிழ் காங்கிரஸ் என்றும் தமிழரசு கட்சி என்றும் இரு பெரும் துருவ அரசியல் வடக்கு- கிழக்கில் கால் கொண்டிருந்தது. மறுபுறம் இடதுசாரிகளின் செல்வாக்கு யாழ்குடாநாட்டில் அதிகரித்து வந்தது. அதனை எதிர்கொள்ள தமிழ் தேசிய சக்திகளை ஒருங்கிணைத்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை அவர் உணர்ந்தார். அதனை நிவர்த்தி செய்யும் வகையில் பிளவுபட்ட தமிழரின் அரசியல் பாதையை ஒருமித்து



கூட்டியெடுத்து தமிழர் விடுதலை கூட்டணியாக மாற்றியமைத்தமையானது அமிர்தலிங்கத்தின் தலைமைத்துவ ஆளுமைக்கு கிடைத்த வெற்றியாகும். அதனுடாகவே வரலாறு காணாத வகையில் 17 உறுப்பினர்களை ஒருமித்து வென்று அவர் எதிர்க்கட்சி தலைவராகி வரலாற்று சாதனையையும் புரிய முடிந்தது.

அதேவேளை வட்டுக்கோட்டை தீர்மானத்தின் ஊடாக தமிழர்களின் அரசியல் பாரம்பரியத்தை தீவிரவாத சிந்தனை நோக்கி திருப்பியதில் இவருக்கு முக்கிய பங்குண்டு. இந்த விடயத்தில் தமிழ் தேசியவாதிகள் இவரை ஒரு சாதனையாளராக பார்க்கின்றனர்.

அதேவேளை இளைஞர்களை ஆயுதமேந்தி வைத்து விட்டு அவர்களுக்கு ஓர் சரியான தலைமையை கொடுக்க முடியாது, இளைஞர்களை கட்டுமீறி செயல்பட அனுமதித்தார். அல்லது விட்டு விலகி ஓடி தமிழ் நாட்டில் அஞ்ஞாதவாசமிருந்தார், இதனுடாக வன்முறையும் அராஜகமும் கொண்ட ஒரு பாரம்பரியத்தை போராட்டம் என்கின்ற பெயரில் வடக்கு கிழக்கில் செயற்பட வாய்ப்பளித்தார், என்கின்ற குற்றச்சாட்டுகளும் அவர் மீது இன்று பலராலும் முன் வைக்கப்படுகின்றன.

ஆன போதும் இலங்கை தமிழர் பிரச்னையை இந்தியாவின் டில்லி முதற்கொண்டு சர்வதேச அரங்குகளை எடுத்துச் சென்றதில் அமிர்தலிங்கத்துக்கு நிகர் இன்றுவரை யாருமிலர் எனலாம். ஒரு தேர்ந்த இராஜதந்திரியாக அவர் இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி போன்ற இந்திய தலைவர்களை ஆட்கொண்டிருந்தார்.

செல்வநாயகம் காலத்திலிருந்தே தமிழ் நாட்டின் பெருந் தலைவர்களான பெரியார், காமராஜர், போன்றவர்களோடு அறிமுகமானார். பின்னாளில் முதல்வர்களாயிருந்த எம்ஜிஆர், கருணாநிதி போன்றவர்களோடும் நெருக்கமான உறவுகளையும் பேணினார்.

ஆயுதப் போராட்ட இயக்கங்கள் ஐந்துடனும் இலங்கையரசு நேரிடையாக பேச வேண்டியதன் அவசியத்தை இந்தியாவுக்கு புரிய வைப்பதில் இந்திய இராஜதந்திரிகளை இலாவகமாக கையாண்டார். அதனுடாக ‘திம்பு பேச்சுவார்த்தை’ என்கின்ற உரையாடல் மேசையொன்றை நோக்கி முதன் முறையாக இலங்கையரசை நகர்த்துவதற்கு தேவையான நெருக்கடியை அவர் கொடுத்தார். பின்னர் அந்த அத்திவாரத்திலிருந்தே இலங்கை இந்திய ஒப்பந்தம் கூட சாத்தியமானது எனலாம்.

எத்தனைதூரம் தேசிய அளவிலும் சர்வதேச ரீதியாகவும் இலங்கை தமிழர்களின் மதிக்கப்படுகின்ற தலைவராக அமிர்தலிங்கம் இருந்த போதும் பரந்துபட்ட தமிழ் மக்களின் பெருந் தலைவராக அவரால் மிளிரமுடியவில்லை. தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் அவர் மீது கொண்டிருந்த கசப்புணர்வுகளை அவரால் வெற்றி கொள்ள முடியவில்லை.

குறிப்பாக 1965-1970களில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தீண்டாமை எதிர்ப்பு போராட்டங்களில் அமிர்தலிங்க



மும் சரி அவர் சார்ந்த தமிழரசு கட்சியும் சரி ஒரு வலதுசாரி மேட்டுக்குடி நிலைப்பாட்டையே எடுத்திருந்தனர்.

பாராளுமன்றில் சங்கானை சாதியெதிர்ப்பு போராட்டத்தை அது ஒரு ஷங்காய் சங்கானையல்ல என்று கேலி செய்தார். வடகுடாநாட்டின் ஒடுக்கப்பட்ட மக்கள் இடதுசாரிகளையும் ஏன் சிங்கள தலைமைகளை கொண்ட தேசிய அளவிலான கட்சிகளையும் வரவேற்ற அளவுக்கு கூட அமிர்தலிங்கத்தை வரவேற்க முன்வராமைக்கு அவரது மேற்படியான அரசியல் தவறுகள் காரணமாயின.

அதேபோல செல்வநாயகத்துக்கு பின்னரான கட்சி தலைமையை கைப்பற்றுகின்ற போட்டியில் கிழக்கின் முடிசூடா மன்னன் இராஜதுரையை ஓரங்கட், ஒதுக்கிவிடுவதில் அவர் கையாண்ட வழிமுறைகள் ஒரு சிறந்த தலைமைக்குரிய குணவியல்புகளை கொண்டிருக்கவில்லை.

அந்த மனத்தாங்கல்கள் இன்றுவரை கிழக்கு மக்களிடையே வடுக்களாக தொடருகின்றன.

1989ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் அவர் மட்டக்களப்பில் போட்டியிட்டமையும் மட்டக்களப்பு மக்களால் பெரிதாக வரவேற்கப்படவில்லை. ஒரு யாழ்-மேலாதிக்க மனோபாவத்தின் வெளிப்பாடாக மக்கள் பார்த்தனர். 1977ஆம் ஆண்டு மட்டக்களப்பில் விதைத்ததை 1989ஆம் ஆண்டு அவர் அறுவடை செய்தார். ஆம் அவர் படுதோல்வியடைய நேரிட்டது. எனினும் அவர் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்ற அங்கத்துவத்தை பெற்றுக் கொண்டார்.

இறுதியாக எந்த தீவிரவாதத்தை அவர் ஆதரித்தாரோ, எந்த வன்முறைகளுக்கு தூபமிட்டு வளர்த்தெடுத்தாரோ அந்த வன்முறையே அவரைப் பலி கொண்டது. அதிலும் எந்த ஆயுதபோராட்ட தலைமையை அவர் அதிகம் முன்னிறுத்தினாரோ அந்தப் பிரபாகரனே அவருக்கு காலனாயினான். 1989 யூலை 13 ஆம் திகதி கொழும்பில் அவர் தங்கியிருந்த வீட்டில் வைத்து புலிகளால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1949ஆம் ஆண்டிலிருந்து தொடங்கிய அமிர்தலிங்கத்தினுடைய அரசியல் வாழ்வு 1989ஆம் ஆண்டு அவர் கொல்லப்படும் வரையான சுமார் நாற்பது வருட காலம் நீடித்தது.

மூத்த அரசியல் தலைவரான அமிர்தலிங்கம் அவர்களது 99வது பிறந்த தினம் ஆகஸ்ட் 26ல் வருகின்றது. அவர் கொல்லப்பட்ட போது அவருக்கு அஞ்சலி செலுத்தி விட்டு வெளியே வந்த முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க இப்படிச்சொன்னார்

ஒரு சிங்கள மகனின் கரங்களால் இவர் கொலை செய்யப்படவில்லை என்பதற்காக கடவுளுக்கு நன்றி சொல்கின்றேன் என்றார்.

- எம்.ஆர.ஸ்ராலின் ஞானம்

# அமெரிக்காவுக்கு "குட்பை" சொல்லும் வளைகுடா நாடுகள்? எடுபடாத ட்ரம்ப் வியூகமும் தாக்கமும்!

வளைகுடா நாடுகளில் பல ஆண்டுகளாக ஆழமாகப் பதிந்திருந்த அமெரிக்காவின் அசைக்க முடியாத சுவடுகள், இப்போது கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கி விட்டன.

அமெரிக்காவே எங்களின் பாதுகாப்பு கவசம் என்று சரணாகதியில் இருந்த வளைகுடா நாடுகள் இன்று அதிபர் ட்ரம்ப்பின் இராஜதந்திர' நடவடிக்கைகளாலும் முரண்பட்ட பேச்சுகளாலும் பெரும் பொருளாதார மற்றும் உயிரழப்புகளைத் தாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

ஒரு புறம் ஈரான் அச்சுறுத்தல், மறு புறம் ஹார்முஸ் நீரிணைப் பாதை மூடப்பட்டதால் செங்கடல் பகுதியில் ஹவுதிகளின் தாக்குதல் என வளைகுடா அரசுகளும், அவற்றின் தொழில் துறையும் தவிக்கின்றன.

அமெரிக்காவை நம்பி இனி பயனில்லை எனக் கருதி, வளைகுடா நாடுகள் இப்போது மாற்றுப் பாதையைத் தேடத் தொடங்கி விட்டன. அமெரிக்க ராணுவத் தளங்களை நம்பியிருந்த காலம் போய் சீனா, ரஷ்யா மற்றும் புதிய பிராந்திய ஒப்பந்தங்களை நோக்கி வளைகுடா நாடுகள் நகரத் தொடங்கியுள்ளன.

வளைகுடா நாடுகள் விரும்பாத போர்: ஈரானுடன் அமெரிக்கா கடந்த பிப்ரவரி 28-ஆம் தேதி தொடங்கிய போர் எப்போது முடிவுக்கு வரும் எனத் தெரியாமல் பல மாதங்களாக நீடிக்கிறது. இதனால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலையும் சப்ளையும் கடும் ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகின்றன.

உண்மையில், ஈரான் மீது அமெரிக்கா தொடுத்த இந்தப் போரை மேற்காசியாவில் உள்ள சவுதி அரேபியா, பஹ்ரைன், குவைத், கதார், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் விரும்பவில்லை. அமெரிக்கா போரைத் தொடங்கி விட்டு அதை முடிவுக்குக் கொண்டுவர முடியாமல் திணறுவதைப் பார்த்தும், அதிபர் ட்ரம்ப்பின் முரணான பேச்சுகளாலும் இந்த ஐந்து நாடுகளும் வெறுப்பின் உச்சத்தில் உள்ளன என்று திவாஷிங்டன் போஸ்ட் நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் ராணுவப் படையைத் தங்கள் நாட்டில் தங்கவைக்க ஏன் அனுமதியளித்தோம்? என்று இந்த ஐந்து நாடுகளும் தங்களுக்குள்ளேயே கேள்வி எழுப்பிக் கொண்டுள்ளன. வளைகுடா நாடுகள் கூட்டணியின் முக்கிய அதிகாரி ஒருவர், அதிபர் ட்ரம்ப் போரைத் தொடங்கினார். ஆனால் அதற்கான விலையை நாங்கள் கொடுக்கிறோம் என ஆதங்கத்துடன் தெரிவித்துள்ளார்.

யூரேசியா குழுமத்தின் ஆய்வாளர் பிராஸ் மக்காட் கூறுகையில், அமெரிக்காவின் நட்பில் இருக்கும் வளைகுடா நாடுகள், ஈரானுடனான போரை ஒருபோதும் விரும்பவில்லை. ட்ரம்ப்பின் ஈரானுக்கு எதிரான கொள்கை நிலையற்றதாகவும், கணிக்க முடியாததாகவும் இருக்கிறது.

சவுதி அரேபியாவும் கத்தாரும் உலகிலேயே அதிக அளவில் கச்சா எண்ணெயை ஏற்றுமதி செய்து வருகின்றன. ஆனால், ஹார்முஸ் நீரிணை மூடல் மற்றும் ஏமனில் ஹவுதி படையினரின் தாக்குதலால் பாப் அல்-மன்தீப் பகுதி வழியாகச் செல்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல் ஆகியவற்றால் ஏற்றுமதி மோசமாகச் சரிந்து விட்டது எனத் தெரிவித்துள்ளார்.

கரையும் நம்பிக்கையும் சவுதியின் பாதிப்பும்: பல ஆண்டுகளாக வளைகுடாப் பகுதியில் முகாமிட்டிருந்த அமெரிக்க இராணுவத்தைச் சகித்துக் கொண்டு தான் வளைகுநா நாடுகள் இருந்தன என்று சர்வதேச அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கிறார்கள். ஏனென்றால், அமெரிக்க ராணுவம் இருந்தால் பிராந்தியப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என நினைத்த அந்நாட்டுகள், தற்போது ஈரானின் தாக்குதலுக்கு ஆளான பின், ஏன் அமெரிக்க இராணுவத்துக்கு இடம் கொடுத்தோம்?'' என்று வருந்துகின்றன.

அமெரிக்கா தன்னிச்சையாக ஈரானுடன் நடத்தும் போரினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பதும், அதிக அழுத்தத்தைச் சந்தித்திருப்பதும் சவுதி அரேபியா தான். ஹார்முஸ் நீரிணை மூடப்படுவதற்கு முன்பாக சவுதி அரேபியா தினசரி 50 லட்சம் பேரல் கச்சா எண்ணெயை ஏற்றுமதி செய்து வந்தது. ஆனால், இப்போது அதில் ஐந்தில் ஒரு பங்கு மட்டுமே ஏற்றுமதி செய்ய முடிகிறது.

கச்சா எண்ணெய் விலையும் சர்வதேச சந்தையில் பேரல் 100 டாலரை எட்டி விட்டது. ஓமன், ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன் ஆகிய நாடுகள் போரைத் தவிர்க்க முயன்றபோதிலும், அமெரிக்காவின் நிர்பந்தத்தால் போரில் அங்கம் வகிக்க இழுத்துச் செல்லப் பட்டன.

தோல்வியடைந்த ட்ரம்ப்பின் ராஜ தந்திரம்: அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மற்றும் அவரது நிர்வாகத்தின் தெளிவற்ற உத்திகளே இந்தப் பிளவுக்குக் காரணம்.

ஆபிரகாம் ஒப்பந்தத்தால் அதிருப்தி: இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையிலான உறவை இயல்பாக்க 'ஆபிரகாம் ஒப்பந்தம், அதிபர் ட்ரம்பால் செய்யப்பட்டது. ஆனால், பாலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இஸ்ரேலுக்கு ஆதரவளித்து பாலஸ்தீனத்தை தாக்கியது அரபு மற்றும் இஸ்லாமிய மக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், அரபு தலைவர்களுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ராஜாங்க ரீதியான இடைவெளியை அதிகரித்துள்ளது.

ட்ரம்ப்பின் நிலையற்ற பேச்சு: ஈரான் விவகாரத்தில் ஒருநாள் ராணுவ எச்சரிக்கை விடுப்பது, மறுநாளே பேச்சுவார்த்தைக்கு அழைப்பது என ட்ரம்ப்பின் முரண்பாடான பேச்சு எதிரிகளை விட அமெரிக்காவின் நட்பு நாடுகளையே அதிகம் குழப்பத்துக்கு ஆளாக்கியுள்ளது.

மெக்கா உடன்படிக்கை: அமெரிக்கப் படையின் பாதுகாப்பை நம்பி எத்தனை நாட்களுக்குத் தான் இருப்பது என்று விரக்தியடைந்த சவுதி அரேபியா, துருக்கி மற்றும் பாகிஸ்தானுடன் சேர்ந்து சமீபத்தில் 'மெக்கா ஒப்பந்தம்' செய்து கொண்டன. எதிர் காலத்தில் அமெரிக்காவை மட்டும் தனித்துப் பாதுகாப்புக்காக நம்பியிருக்க முடியாது என்பதை உணர்த்துவதாகவும், பிராந்தியத்தில் தங்கள் பாதுகாப்பைத் தாங்களே உறுதிசெய்து கொள்ளவும் இந்த உடன்படிக்கை அமைந்துள்ளது.

சீனா, ரஷ்யாவுடன் நெருக்கம்: மேலும், வளைகுடா நாடுகளிடம் இருந்து பெருமளவில் கச்சா எண்ணெய் வாங்கும் சீனா மற்றும் ரஷ்யாவுடன் பொருளாதார, ராஜதந்திர உறவுகளை அரபு நாடுகள் தீவிரமாக வளர்த்து வருகின்றன.



அதிபர் ட்ரம்ப், 'அமெரிக்காவே ஃபர்ஸ்ட்' என்ற கொள்கையின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கும் போது, வளைகுடா நாடுகள் தங்கள் 'சுய பாதுகாப்பு மற்றும் பிராந்திய இறையாண்மையே முதன்மை' என்ற நிலைப்பாட்டுக்கு வந்து விட்டன. அமெரிக்கா முழுமையாக வளைகுடாவை இழக்கவில்லை என்றாலும், இழக்கத் தொடங்கி விட்டது. அரபு நாடுகள் தங்களின் சொந்தப் பாதையைத் தேர்ந்தெடுக்கத் தொடங்கி விட்டன என்பது மறுக்க முடியாத உண்மை. (நன்றி- த இந்து)

## கேரளப் பெண்ணை மண முடித்தார் ஸ்கொட்லாந்து முன்னாள் எம்.பி



ஸ்கொட்லாந்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான மார்ட்டின் டே (Martin Day) இந்தியாவின் கேரளாவைச் சேர்ந்த நிதிஷா (நிதிச் சந்த்) என்பவரை புகழ்பெற்ற குருவாயூர் ஸ்ரீ கிருஷ்ணர் கோவிலில் இந்து பாரம்பரிய முறைப்படி திருமணம் செய்து கொண்டார். கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டம் பிறவம் பகுதியைச் சேர்ந்த நிதிச் சந்த், கடந்த 2008ஆம் ஆண்டு உயர்கல்விக்காக இங்கிலாந்து சென்றுள்ளார்.

அச்சமயத்தில் அமுல்படுத்தப்பட்ட விசா விதிமுறை மாற்றங்களால் பல்வேறு மாணவர்கள் எதிர்கொண்ட சிக்கல்களுக்கு எதிராகப் பாராளுமன்றக் குழுக்கள் முன் அவர் தீவிரமாக குரல் கொடுத்துள்ளார். அந்தப் போராட்டத்தின் போது தான் அன்றைய எம்.பியாக இருந்த மார்ட்டின் டேவை நிதிஷா முதன்முதலில் சந்தித்துள்ளார். ஆரம்பத்தில் சாதாரண நட்பாகத் தொடங்கிய இவர்களது உறவு, நாளடைவில் நெருக்கமாகி 2016ஆம் ஆண்டு காதலாக மலர்ந்தது.

2016ஆம் ஆண்டிலேயே இருவரும் இங்கிலாந்தில் சட்டப்பூர்வமாக பதிவுத் திருமணம் செய்து கொண்டனர். இருப்பினும் நிதிஷாவின் விருப்பப்படி கேரளாவில் உள்ள குருவாயூர் ஸ்ரீ கிருஷ்ணர் சந்நிதியில் பாரம்பரிய இந்து கலாசார முறைப்படி மீண்டும் திருமணம் செய்துகொள்ள இருவரும் முடிவு செய்தனர். அதன்படியே, உறவினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் முன்னிலையில் குருவாயூர் கோவிலில் இவர்களது திருமணம் நடைபெற்றது.

# மரண அறிவித்தல்



## அமரர் உயர்திரு Dr.நடராஜா சுப்பிரமணியம்

யாழ்.கலட்டி, லண்டன், ரொறன்ரோ கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகக் கொண்டிருந்த Dr நடராஜா சுப்பிரமணியம் அவர்கள் 25 ஆகஸ்ட் 2026 செவ்வாய்க்கிழமையன்று உடுவிலில் காலமானார்.

அன்னார் யாழ்.கலட்டி திரு திருமதி தாமோதரம்பிள்ளை சுப்பிரமணியம் அருளம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு திருமதி இரட்ணசபாபதி நேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்

திருமதி ஜெயலெட்சுமியின் பாசமிகு கணவரும்

சுமதி (கனடா) டாக்டர் சுரேன் நிமலன் (இந்தியா) சுகுணன் (பொதுமுகாமையாளர் HNB Life) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும்

ஆர்.ஆர்.ராஜ்குமார் (நிதி ஆலோசகர் - கனடா) டாக்டர் புஸ்பகரணி நிமலன் (இந்தியா) திருமதி துஸ்யந்தி சுகுணன் (சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும்

சாய்பிரிந்தன் ராஜ்குமார் (Daster Media Coop -கனடா) பிரகலாத் நிமலன் (இந்தியா) துருவார் நிமலன் (இந்தியா) விஜியந்தி சுகுணன் விதுவப்பிரியா சுகுணன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும்

மனோரஞ்சிதம் பாலேந்திரா (கனடா)வின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் உடுவில் உள்ள அவரது இல்லத்தில் 30 ஆகஸ்ட் 2026 ஞாயிற்றுக்கிழமை பார்வைக்கு வைக்கப்பட்டு 31 ஆகஸ்ட் 2026 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு ஈமைக்கிரியைகள் நடைபெற்று மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**தொடர்புகளுக்கு:- சுமதி ராஜ்குமார் 647 289 6164**

**சுகுணன் நடராஜா 077 283 4462**

**முகவரி:- நம்பர் 07 லவ்லேன் - உடுவில் யாழ்ப்பாணம்**

# அருட்தந்தை ஜிம்பிரவுணுக்கு நீதி கிடைக்காத நாட்டில் ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கு நீதி?

(16ம் பக்கத் தொடர்ச்சி) ஒப்பிடுவது தொடர்பான அடுத்த கட்டத்துக்குப் போகலாம். ஆனால் நீதி அமைச்சர் அண்மையில் செம்மணிக்கு வருகை தந்த போது பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் என்ன சொன்னார்? மரபணு மாதிரிகளை ஒப்பு நோக்குவது என்பது இறுதிக்கட்டம் என்று. அந்த இறுதிக்கட்டம் எப்பொழுது வரும்?

அண்மையில் எழுமாறாக தெரிந்தெடுக்கப்பட்ட ஓர் இடத்தில் அகழ்ந்து பார்த்த போது அங்கேயும் எலும்புக் கூடுகள் கிடைத்தன. ஆயின் புதிது புதிதாக இடங்கள் அடையாளம் காணப்பட்டால் அகழ்வுப் பணிகள் எப்பொழுது முடியும்? அடுத்த கட்ட விசாரணை எப்பொழுது தொடங்கும்?

அரசாங்கம் செம்மணி விடயத்தை நாட்டின் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்மையை அனைத்துலக அளவில் நிரூபிப்பதற்கு கிடைத்த ஒரு வாய்ப்பாகக் கருதுகிறது.அதை நோக்கியே கடந்த 23 மாதங்களாக உழைக்கின்றது. கடந்த ஆண்டு ஐநாவில் உரை நிகழ்த்திய நாட்டின் வெளிவிவகார அமைச்சர் சர்வதேச விசாரணைப் பொறி முறையை நிராகரித்து விட்டார். எனவே அவர்கள் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்மையை எப்படிப் பலப்படுத்துவது என்று தான் சிந்தித்து உழைப்பார்கள்.

இது ஒரு விதத்தில் இரண்டு பக்கமும் கூரான கத்தியைப் போன்றது. உள்நாட்டு விசாரணைப் பொறி முறையின் நம்பகத் தன்மையைப் பலப்படுத்தப்போய் அதன் விளைவாக எதிர்காலத்தில் தன்னுடைய தேர்தல் வெற்றிகளை கேள்விக்கு உள்ளாக்க அரசாங்கம் விரும்பாது.

ஏனென்றால் இலங்கைத்தீவில் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்மையை நிரூபிப்பது என்பது அதன் பிரயோக வார்த்தைகளில் குறிப்பாக தமிழ்நோக்கு நிலையில் போர்க் குற்றச்சாட்டுக்கு இலக்காகியிருக்கும் படைத் தரப்பை விசாரிப்பதும் தண்டிப்பதும் தான். அப்படி விசாரித்து படைத்தரப்பைச் சேர்ந்தவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டால் அது எதிர்காலத்தில் அரசாங்கத்தின் தேர்தல் வெற்றிகளைப் பாதிக்கும். இனவாதிகள் அதனை அரசாங்கத்துக்கு எதிராகத் திருப்பிப் பிடிப்பார்கள். யுத்த வெற்றியை இந்த அரசாங்கம் காட்டிக் கொடுத்து விட்டது என்று கொந்தளிப்பார்கள்.

எனவே இலங்கைத்தீவில் உள்நாட்டு விசாரணை பொறிமுறையின் நம்பகத் தன்மையை இன முரண்பாடு சம்பந்தப்பட்ட விவகாரங்களில் நிரூபிப்பது அரசாங்கத்தைப் பொறுத்தவரை தனக்குத்தானே சூனியம் வைத்ததாக அமையலாம். மாறாக எதிர்க் கட்சிகள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் அதாவது எதிர்க்கட்சிகளை குற்றம் சாட்டக்கூடிய விடயங்களில் உள்நாட்டு விசாரணைப் பொறி முறையின் நம்பகத் தன்மையை நிரூபிப்பது நீண்ட எதிர்காலத்தில் அரசாங்கத்திற்குப் பாதுகாப்பானது.

அதன் மூலம் எதிர்க்கட்சிகளை அம்பலப்படுத்தலாம்.எதிர்கட்சிகளை தற்காப்பு நிலைக்குத் தள்ளலாம். அது உள்நாட்டில் அரசாங்கத்தைப் பலப்படுத்த உதவும். எதிர்கால தேர்தல் வெற்றிகளையும் அது பாதுகாக்கும். எனவே உள்நாட்டு விசாரணைப் பொறி முறையின் நம்பகத் தன்மையை பலப்படுத்துவது என்பது அரசாங்கத்தின் நோக்குநிலையில் எதிர்க்கட்சிகளை தற்காப்பு நிலைக்குத் தள்ளுவது தான். எதிர்க் கட்சிகளை பலவீனப்படுத்துவது தான். தமிழ்மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பது அல்ல. பொறுப்புக் கூறுவது அல்லஅதாவது ஜிம் பிரவுண் அடிகளாருக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பது அல்ல.

# காணாமல் போனோரின் 31 பேரை இது வரை கண்டறிந்துள்ளார்களாம்

(7ம் பக்கத் தொடர்ச்சி) முப்படையினர் மற்றும் இரட்டிப்பான விண்ணப்பங்களைத் தவிர்த்து 16,966 விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது இவற்றில் இதுவரை 9,819 முறைப்பாடுகளுக்குரிய பூர்வாங்க விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. மேலதிக விசாரணைகளுக்காகக் கோரப்பட்ட சுமார் 2,000 விண்ணப்பங்கள் எமது தலைமை அலுவலகத்தில் உள்ள தேடுதல் பிரிவுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. இவற்றில் ஏறத்தாழ 800 விண்ணப்பங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குக் கடிதங்கள் மூலம் அனுப்பி விவரங்கள் தேடப்பட்டு வருகின்றன. அதேவேளை, எமக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடு களின் அடிப்படையில் இதுவரை 31 பேரை நாம் நேரடியாகக் கண்டு பிடித்துள்ளோம்' எனத் தெரிவித்தனர். அத்துடன் இடைக்கால நிவாரணம் வழங்குவ தற்காக இதுவரை 7,726 முறைப்பாடுகள் இழப்பீட்டு அலுவலகத்துக்குச் பரிந்துரை செய்யப் பட்டுள்ளதுடன், 5,540 விண்ணப்பதாரிகளுக்கு இடைக்கால நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்படும் இரண்டு இலட்சம் ரூபா கொடுப்பனவானது இழப்பீடு அல்ல, அது காணாமல் போன ஆட்களில் தங்கியிருப்பவர்களுக்கான வாழ்வாதார உதவியாகும்.

உரிய இழப்பீட்டை வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தற்போதைய அரசாங்கமும் நீதி அமைச்சரும் இணைந்து விசேட குழுவொன்றை நியமித்துள்ளனர்.

அக்குழுவின் பரிந்துரைகள் கிடைத்த பின்னர் இழப்பீடு வழங்கும் முறை குறித்துத் தீர்மானிக்கப்படும்' எனவும் குறிப்பிட்டனர்.

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



Vilosanan Sivatharman
416-993-0826

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com




# சர்வதேச நெறிமுறைகளைப் பின்பற்றாத அரசாங்கம் சர்வதேச வலிந்து காணாமல் போன ஆட்கள் தினத்தை ஏன் கொண்டாடுகின்றது?

ஒரு நாட்டின் சர்வதேச நெறிமுறைகளை பின்பற்ற மாட்டோம் என்ற அரசாங்கம் சர்வதேச வலிந்துபோன ஆட்கள் தினத்தை ஏன் நடத்துகின்றது? அவர்களின் சட்டத் திட்டங்கள் எமக்குத் தேவைப்படாது என்றவர்கள் ஏன் இதைக் கொண்டாட வேண்டும் என சிவில் சமூக குரல் கொடுக்கும் செயற்பாட்டாளர் யாழ் பகுதியைச் சேர்ந்த கம்சிக்கா ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

வலிந்து காணாமலாக்கப்பட்டமையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினத்தை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடுகின்றது.

இத்தினத்தை முன்னிட்டு வடக்கில் உள்ள யாழ்ப்பாணம் கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் உறவினர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இணைந்து 24 ஆகஸ்ட் 2026 திங்கள்கிழமை மாலை மன்னாரில் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது

இச் சந்திப்பில் செவ்வாய்கிழமை 25.08.2026 அன்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்படும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் மற்றும் அரச கட்டமைப்புகள் முன்னெடுக்கும் தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் தற்போதைய நிலை எதிர்பார்ப்புகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பாகவும் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்தும் நோக்கில் இவ்ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

இச்சந்திப்பின ' போது யாழ்ப்பாணம் – புங்குடுதீவு – கிளிநொச்சி மற்றும் மன்னார் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக சிவில் சமூக குரல் கொடுக்கும் செயற்பாட்டாளர் யாழ் பகுதியைச் சேர்ந்த கம்சிக்கா ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்

காணாமல்போன உறவுகளை தேடுவதற்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் யாழ்ப்பாணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினத்தை கொண்டாடுகின்றது.



ஒரு நாட்டின் சர்வதேச நெறிமுறைகளை பின்பற்ற மாட்டோம் என்ற அரசாங்கம் சர்வதேச வலிந்துபோன ஆட்கள் தினத்தை ஏன் நடத்துகின்றது? அவர்களின் சட்டத்திட்டங்கள் எமக்குத் தேவைப்படாது என்றவர்கள் ஏன் இதைக் கொண்டாட வேண்டும்.

சர்வதேசத்திற்கு நாங்கள் இவர்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுத்து விட்டோம் இங்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சனைகள் எல்லாம் தீர்க்கப்பட்டு விட்டது என்று வெளிப்படுத்தும் நோக்குடன் சம்பிரதாய முறைப்படி இதைக் கொண்டாடுகின்றோம் என்பதற்காகவே இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

இதை கொண்டாடுவதற்கு இவர்கள் என்ன செய்திருக்க வேண்டும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை ஒவ்வொரு வருடத்திலாவது விடுவித்திருக்க வேண்டும். இவர்களை விடுப்பிப்பதற்காக போராடிக் கொண்டிருக்கும் அம்மாமாருக்கு அவர்களின் பிள்ளைகளை திருப்பிக் கொடுத்திருக்க வேண்டும்.

ஆனால் இதை ஒன்றும் செய்யாமல் கண் துடைப்புக்காக இந்த நிகழ்வை செய்கின்றார்கள் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம். இந்த ஓஎன்பியானது எமது மக்களிடையே ஒரு தோல்வி கண்ட ஒரு அலுவலகமாகவே இருக்கின்றது. வலிந்து காணாமல் போனவர்களுக்கு ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று கொடுப்பனவுகளை வழங்கி பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வரத் தெண்டிக்கின்றது. ஆனால் எங்கள் உறவுகள் கேட்பது இந்த நஷ்டஈடுகளை அல்ல. மாறாக எங்கள் பிள்ளைகளை எங்களிடம் ஒப்படையுங்கள் என்றும் அல்லது எங்கள் பிள்ளைகளை கொன்று விட்டோம் என்று சர்வதேசத்திடம் ஒத்துக் கொள்ளுங்கள்.

அதை விடுத்து பிரச்சனையை மூடி மறைக்கப் பார்க்கின்றீர்கள். அம்மாமாரின் போராட்டங்களோடு இது முடியும் பிரச்சனை அல்ல. ஒவ்வொரு மாவட்டங்களிலும் சிவில் சமூகங்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே எப்பொழுது யாரால் காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்ற தரவுகளை கொண்டதாக புத்தங்களாக கிளிநொச்சி வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் சிவில் சமூகங்களால் உருவாக்கி வைத்துள்ளனர்.

இந்த புத்தகங்களில் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு தரவுகளும் இவர்களின் உறவுகளின் மன வேதனை. இவ்வாறு இருக்க நீங்கள் நஷ்டஈடு கொடுக்கின்றீர்கள். இது தொடர்பான தினத்தை கொண்டர்டுகின்றீர்கள். எங்களுக்கு நஷ்டஈடு வேண்டாம். மாறாக காணாமல் ஆக்கப்பட்வர்களுக்கு என்ன நடந்தது என்ற பதிலே அவசியமானது. நாங்கள் கோருகின்ற வெளிநாட்டு பொறிமுறைகளும் அதற்கான தனியான நீதிமன்றமும் சர்வதேச கண்காணிப்புடன் நடவடிக்கைகளையே கோரி நிற்கின்றோம்.

இதை விடுத்து சர்வதேச தின கொண்டாடத்தை நாங்கள் எற்றுக் கொள்ளவில்லை. இந்த நிகழ்வை கொண்டாடும் அரசாங்கம் காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துங்கள் விடுவிக்கப்பட்டதாக கூறப்படுபவர்களின் தரவுகளை தாருங்கள் அப்பொழுது தான் இந்த சர்வதேச தினம் அர்த்தமுள்ளதாக அமையும் என இவ்வாறு தெரிவித்தார்.

'இதேவேளை சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தினை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நிகழ்வு நடைபெற்றன.

மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு குறித்த நிகழ்வு இடம்பெற்றன. இந்நிகழ்வில் நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார , கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் , நாடாளுமன்ற உறுப்பினர்களான க. இளங்குமரன், ச பவானந்தராசா மற்றும் ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் ஒரு அங்கமாக பயனாளிகளுக்கு மூக்கு கண்ணாடிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

கடந்த வருடங்களில் இந்நிகழ்வு அலரி மாளிகையிலும் கொம்பனித் தெரு ஞாபகார்த்த மண்டபத்திலும் நடைபெற்றிருந்த நிலையில், இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

அதேவேளை, சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான ஆகஸ்ட் 30ஆம் திகதி வடக்கு – கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் சர்வதேச மாநாடும் கண்காட்சியும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.